The following legend is narrated by sage Gautama with a view to glorifying this *vrata*: One day, Durvāsas went to Viṣṇu and presented to him a *bilva-mālā*, which he casually placed on his Garuḍa. The sage naturally got enraged at this and cursed Viṣṇu that he would be deserted by Lakshmī, Garuḍa, and even Vaikuṇṭha. Thereupon, Bṛhaspati advised Viṣṇu to observe the Umāmaheśvara vrata, which he did. This enabled Viṣṇu to regain all that he had lost including Vaikuṇṭha.

XVI. Śivarātri vrata

This is by far the most important of the *vratas* observed in honour of Śiva. Accordingly this *vrata* has acquired wide popularity. It is scrupulously observed by all the staunch adherents of Saivism. The day assigned for the observance of this *vrata* is the *caturdaśī* in the dark half of the month of Māgha. The *tithi* is required to extend up to the mid-day. This day, it is said, was the day on which Śiva assumed the *liṅga* form for the first time. The *vrata pūjā* is performed at the end of each *yāma* of the night, and *arghyas* are offered each time. The *vratapāraṇam* is performed on the following day.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

It is said about this *vrata* that if one happens to fast and keep awake on the night of the *caturdaśī* in the dark half of the month of Māgha even unintentionally he is bound to be endowed with the merit usually ensuing the regular observance of the Śivarātri vrata.

The following story is recounted in the *Vratacūḍāmaṇi* in confirmation of this belief: Once there lived a hunter who was constantly engaged in the act of merciless killing of the animals which he came across in the forest. One day, after roaming about, he came to a *bilva* tree. There he saw a deer, and prepared himself to kill it. Just at that moment the deer made an appeal to the hunter in human voice. It said that it would go to its mate, bid her farewell, and then return and offer itself to the hunter. The latter felt so much assured by the sincerity of the beast that he granted its request. He then climbed the *bilva* tree, and in order to keep himself occupied while awaiting the return of the deer, he plucked the leaves of the tree one by one and dropped them down. Soon the mate of the deer herself came to the spot in search of her master. The hunter mistook her for the deer who had promised to return and was about to discharge his arrow. Seeing this, the doe also spoke in human voice and requested the hunter to spare her until she returned after having met her husband. The hunter agreed and continued waiting for the return of the deer and plucking the leaves of the *bilva* tree and dropping them down as before in order to divert himself. Thus the hunter was engaged - albeit unintentionally - in the acts of keeping awake through the night and dropping the *bilva* leaves on the *linga* that happened to be under the tree.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

He was also forced by the circumstances to go without food. And the day on which all this happened was the fourteenth day in the dark half of the month of *Māgha*. The hunter has thus observed, though unknowingly, the Śivarātrī vrata. He, therefore, became entitled to the fruits of the regular observance of that *vrata*. Accordingly, on the following morning, the *śiva gaṇas*, appeared on the scene and led him to the world of Śiva with all the honours due to divine beings.

Besides these *vratas* which are very commonly observed some other *vratas*, such as the Śivacaturdaśī vrata, the Anaṅgatrayodaśī vrata, and the Pāśupata vrata, are mentioned in the Purāṇas. As, however, these latter *vratas* do not enjoy wide prevalence they are not elaborated here.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ விரதங்கள்

N.R. பட்

(கட்டுரைச் சுருக்கம்)

ஆன்மீகத்துக்கு 'விரதங்கள்' மிகுந்த தொடர்புடைய வழிபாட்டுக்கு உரிய முறைகளில் ஒரு பாகமாக விளங்குகின்றன. விரதம் என்பது ஆகம வழிபாடு முறைகளுக்கு தொடர்பு ஏற்படுத்துவன. இது வீட்டிற்குரிய செயல்; பூசைக்குரிய அங்கங்களைக் கொண்டது. பிரதிமை, பிரதிஷ்டை, தியானம், அபிஷேகம், வஸ்தரம் ஸமர்பித்தல், நைவேத்யம் (அமுது படைத்தல்) மலர் அர்ச்சனை முதலியவை அவை. விரதம் மேற்கொள்ளப்படும் இடம் அந்த சமயக் கோயிலாக மாறுகிறது. காலப்போக்கில் விரதங்கள் கோவில்களுடன் தொடர்புள்ளவைகளாக மேற்கொள்ளப்படுகின்றன. விரத தினங்களில் விரதத்திற்குரிய தெய்வங்கள் மிகவும் வேண்டப்பட்டு சிறப்புப் பெறுகின்றன.

விரதம் என்பது - விருப்பம், ஆணை, விதிமுறை, நடத்தை, வழிமுறை, கோட்பாடு என பொருள் கொண்டது. இரண்டாம் நிலையாக ஆன்மீக செயல்முறை சப்தமாக பரிணமித்து முடிவில் எந்த புனிதமான செய்முறையையும் குறிக்க வந்துள்ளது. விரதம் எளிமை, பக்தியை அடிப்படையாகக் கொண்ட உயர் செய்முறை. இவ் உண்மையான நம்பிக்கை, கொள்கை, ஆன்மீக மதக் கோட்பாடுகளின் வடிவாக உண்ணாமை, உறங்காமை, பூசனை முதலிய ஒழுக்க முறைகளை தன்னுள் கொண்டது.

சைவ விரதங்கள் :

வினாயக சதுர்த்தி, சித்தி வினாயக விரதம், சங்கடஹர கணபதி விரதம், ஸ்கந்த ஷஷ்டி விரதம், ஸரஸ்வதி பூஜை, துர்காஷ்டமி விரதம், மங்கள கௌரீ விரதம் ஆமுக்தாபரண விரதம், படி ப்ரதோஷ விரதம், சனி த்ரயோதசி விரதம், சோமவார விரதம், அமா சோமவார விரதம், பக்தீச்வர விரதம், கேதாரேச்வர விரதம், உமா மகேஸ்வர விரதம், சிவராத்திரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரதம் என்ற இவை இங்க விவரிக்கப்படுகின்றன. இவை சைவர்களால் அனுஷ்டிக்கப் படுபவைகளாகும்.

விரதங்கள் எல்லா வர்ணத்தினராலும் பெண்களாலும் அனுஷ்டிக்கப்படுவதால் அவை மிகவும் பிரசித்தமாக உள்ளன. பெண்களுக்காகவே சில குறிப்பிட்ட விரதங்கள் உள்ளன. விரதம் இருப்பவர்கள் பக்தி கொண்டு நம்பிக்கையுடன், தீய எண்ணம் நீங்கி, ஸமுதாய நலனுக்காகவும், தனக்காகவும் விரதங்களை மேற்கொள்ள வேண்டும்.

விரதம் சங்கல்பத்துடன் ஆரம்பிக்கும். இது விரதம் மேற்கொள்ள தன் விருப்பத்தைத் தெரிவிப்பது. நீராடுவது, ஒரு பொழுதோ, நாள் முழுவதுமோ உண்ணாமை, சரீர, பிற சௌகர்யங்களை விடுதல், புலனுக்குறிய இன்ப நுகர்ச்சிகளை விடுதல் ஆகியன மற்ற நெறிமுறைகள். விரதங்களை நடுவில் கைவிடுவது பாபமாகும். தவிர்க்க முடியாத காரணங்களால் விடப்படும் விரதங்களுக்கு பிராயச்சித்தங்கள் உண்டு.

உபவாசம் விரதத்தின் முக்கியமான அம்சம். தற்போது உபவாசம் என்பது உண்ணாமை என பொருளில் வழங்குகிறது. உபவாசம் என்பது - சுக, சௌகர்ய கொண்டாட்டங்களினின்றும் விடுபட்டு, பூததயை, பொறுமை, தூய்மை, அவா இன்மை கொண்டு ஜபம், யஞ்ஞம், த்யானம் கதாச்ரவணம் என்ற வகையில் விரதத்தைக் கழிப்பது ஆகும். விரதங்களில் நைமித்திகம் (ஒரு நிமித்தத்தைக் குறித்து செய்வது) என்பது விதிக்கப்பட்ட - செய்யப்பட வேண்டிய நித்ய கர்மாக்களை முன்னிட்டே அனுஷ்டிக்கப்பட வேண்டும். அஸாதாரண சமயங்களில் ஒருவர் தனக்காக மற்றொருவரை விரதம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யலாம். காம்ய விரதங்களுக்கு (தான் நினைத்ததை நடக்கச் செய்வது) பிறரை பிரதிநிதியாக வைக்கக் கூடாது.

ஹவிஸ் என்பது பொதுவாக பக்குவம் செய்யப்பட்ட அன்னத்தைக் குறிக்கிறது (நைவேத்யம்). பருப்பு, காய், கனி வகைகள் மற்றும் சத்தான எளிய உணவே படைத்து அதில் ஒரு பாகத்தையே விரதம் மேற்கொள்பவர் உண்ண வேண்டும்.

விரதம் மேற்கொள்ள *ரித்விக்* (ஆசார்யர்) ஒருவரை வரிக்க வேண்டும். அவர் பூஜை செய்ய உதவுபவர். உரிய தெய்வத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜிக்க தங்கத்தினால் ஆன ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட பிரதிமைகள் வைக்கப்பட வேண்டும். பூஜையில் இது முக்கியம். மற்றும் ஐந்து வித ரத்தினங்கள் தங்கம், வெள்ளி, வைரம் உபயோகப்படுத்த வேண்டும். அச்வத்தம். (அரசு) உதும்பரம் (அத்தி) ப்லக்ஷம் (அத்தி) சூதம் (மா) ந்யக்ரோதம் (ஆலமரம்) ஆகிய மலர்களின் தளிர்கள், பஞ்சகவ்யம் (பசுவின் சாணம், பால், தயிர், நெய், மூத்திரம் கொண்டது) பஞ்சாமிர்தம் (தயிர், தேன், நெய், சர்க்கரை, பால் சேர்ந்தது) அறுசுவை (இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு) கஸ்தூரி, கேசரம், கற்பூரம் கலந்த சந்தனம் ஆகியவை தக்கவாறு உபயோகப்படுத்த வேண்டும். பிரதிமை நீர் நிரம்பிய கலசத்தில் இருத்தி மேற்கூறிய தளிர்களால் அலங்கரிக்கப்பட்டு பூஜிக்கப்பட வேண்டும். பலவித உபகாரங்கள் செய்யப்பட வேண்டும். மண்டலங்கள் பிரதிமைக்குப் பதிலாக வைக்கப்படும் பிராண பிரதிஷ்டை செய்து பூஜை தொடங்க வேண்டும்.

பூஜையின் முழு செய்முறை வரிசை :

ஆவாஹனம் (பிரதிமையில் தெய்வத்தை விளித்தல்) ஸ்தாபனம் (தெய்வத்தை இருத்துதல்) ஆஸனம் (இருக்கை அளித்தல்) பாத்யம் (பாதம் அலம்ப நீர்) அர்க்யம் (உயர் வாசனைப் பொருள் சேர்ந்த நீர் - கைகளுக்கு) மது பர்க்கம் (நெய், தேன், பால் சேர்ந்தது) ஸ்நானம் (நீராட்டும்) வஸ்திரம் (ஆடை அணிவித்தல்) யஜ்ஞோபவீதம் (பூணூல்) ஸிந்தூரம் (திலகமிட சிகப்புத்தூள்) விலேபனம் (உடல் பசை நீக்க வாசனை திரவியம்) அக்ஷதை (மஞ்சள் சேர்ந்த முழு அரிசி) புஷ்பம் (பல வண்ண வாசனை மலர்கள்) அங்க பூஜை (தேவதையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மலர்கள் கொண்டு பூஜை) தூபம் (வாசனைப்புகை) தீபம் (மங்கள விளக்கு) நைவேத்யம் (அன்னம்) பானியம் (பருகநீர்) உத்தராபோசனம் (உணவு படைத்தப் பின் வாய் சுத்தத்திற்கு நீர்) முகப்ரக்ஷாலனம் (முகம் கழுவுதல் உணவுக்குப்பின்)கரோத்வர்தனம் (கைகள் துடைத்தல்) பலம் (பழம்) தாம்பூலம் (வெற்றிலை, பாக்கு முதலியன) பூஷணம் (அலங்கார நகைகள்) நீராஜனம் (கற்பூரம் சாற்றுதல்) பிரதக்ஷிணம் (வலம் வருதல்) மந்தர புஷ்பம் (ஸ்ரீ ஸுக்த உச்சாரணத்துடன் புஷ்பம் சமர்பித்தல்) தக்ஷிணைதானம் (தக்ஷிணைக் கொடுத்தல்) பிரதிமா தானம் (விஸர்ஜனம் செய்தவுடன் பிரதிமையை அளித்தல்) முதலியன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராஹ்மணம் என்ற வேதப் பகுதிகளில் பலவிரதங்களைப் பற்றிய கதைகளும், உண்டான வரலாறும் கூறப்பட்டுள்ளன. புராணங்களில் கூறப்பட்ட விரதங்களில் முக்கியமாக விஷ்ணுவைக் குறித்தும், மற்றும் - சிவன், சக்தி, கணேசன் குறித்தும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

எல்லா விரதங்களுக்கும் பொதுவாக சில மந்திரங்கள், உபசார வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. அந்தந்த விரதங்களுக்குரிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. விநாயக சதுர்த்தி விரதம்

ச்ரவண (ஆவணி) சுக்ல சதுர்த்தி (அ) கார்த்திகை சுக்ல சதுர்த்தி அன்று இது அனுஷ்டிக்கப்படுகிறது. தங்க பீடத்தில் விநாயகரின் தங்க பிரதிமையை கலசத்தின் மேல் பிரதிஷ்டை செய்து சுத்தி பூஜை செய்து ஸ்தாபன, ஆவாஹனம் முதலியன செய்து பூஜையை கிரமமாக செய்ய வேண்டும். சிவந்த புஷ்பங்கள், பத்திரங்கள், வில்வம், தூர்வா (அருகம்புல்) முக்கியமானவை. மோதகம் (கொழுக்கட்டை), நாவல்பழம், விளாம்பழம் முதலியவை நைவேத்யத்தில் குறிப்பிட்ட அம்சங்கள். விக்னங்கள் நீங்க விநாயகரை துதித்து பூஜையை முடிக்க வேண்டும்.

2. ஸித்தி விநாயக விரதம்

பாத்ரபத (புரட்டாசி) மாதம் அனுஷ்டிக்கப்படுவது. சதுர்த்தி திதி நண்பகல் வரை வியாபித்து இருக்க வேண்டும். பிரதிமையை களிமண்ணால் செய்து பூஜை செய்யப்பட வேண்டும். அருகம்புல் அர்ச்சனை விசேஷம். இதன் மாஹாத்மயம் - ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களுக்கு கூற அவர்கள் இந்தப் பூஜை செய்து தங்கள் காரியங்களில் விக்னங்கள் நீங்கி வெற்றி பெற்றனர். அன்று இரவு சந்திரனைப் பார்ப்பது பூஜை பலனை குலைக்கும், விரதம் இருப்பவர்களுக்கு இன்னல்களை விளைவிக்கும்.

3. ஸங்கடஹர கணபதி விரதம்

பிரதிமை தங்கத்தால் செய்யப்பட வேண்டும். பூஜை முடிவில் பிரதிமையை தக்ஷிணையுடன் பிராம்மணருக்கு தானம் செய்ய வேண்டும். ச்யமந்தகோபாக்யானத்தில் சந்திரன் கணேசரை பரிஹஸித்து, அவனை பார்ப்பது தோஷம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளைவிக்கும் என்று சாபம் பெற்றதும் அவன் தன் சாபம் நீங்க சதுர்த்தி விரதம் இருந்ததும், அதனால் சதுர்த்தி அன்று மட்டும் சந்திரனை பார்ப்பது தோஷம் என்று கணேசர் சாபத்தை குறைத்ததாகவும், நாரதர் பலராமனுக்கு சொன்னதாகவும் கதை.

4. ஸ்கந்த ஷஷ்டி விரதம்

தீபாவளிக்கு அடுத்த நாள் தொடங்கி 6 நாள் நடப்பது. கடைசி நாள் கார்த்திகேயன் சந்நிதியில் சூரஸம்ஹாரத்துடன் கொண்டாடப்படுகிறது.

5. ஸரஸ்வதி பூஜை

சக்திக்கு உகந்தது. ஆச்வின (ஐப்பசி) மாதம் சுக்லபக்ஷம் ஸப்தமி அன்று ஸப்தமி திதி காலைப்பொழுதில் உள்ள தினத்தில் அனுஷ்டிக்க வேண்டியது. விரத சூடாமணியில் இதற்காக பிரத்யேகமாக எதுவும் சொல்லப்படவில்லை.

6. துர்காஷ்டமி விரதம்

உமையின் அவதார தினம். சைத்ர மாதம் சுக்லபக்ஷம் எட்டாவது நாள். மற்றொன்று ஆச்வின (ஐப்பசி) சுக்லபக்ஷ அஷ்டமி. இது மஹாஷ்டமி எனப்படும். விரத சூடாமணியில் விவரங்கள் தரப்படவில்லை.

7. மங்கள கௌரி விரதம்

ச்ராவண (புரட்டாசி) மாதம் எல்லா செவ்வாய்க்கிழமை களிலும் அனுஷ்டிக்கப்படும். பெண்களுக்குரியது. இதில் பிரதிமைக்குப் பதில் தீபம் பூஜையில் வைக்கப்படும். செல்வ செழிப்புக்காக செய்வது. கணவன் உள்ளவரை மட்டுமே செய்யத் தக்கது. கணவன்மார்களுக்கு நீண்ட ஆயுளை விரும்பிச் செய்வது.

8. ஆமுக்தாபரண விரதம்

பாத்ரபத (புரட்டாசி) சுக்ல சப்தமியில் செய்யப்படுவது. சிவனைக் குறித்து விரதம் எழுப்புவர். மணிக்கட்டில் பிரதிஸரம் கட்டிக் கொள்வர். இதற்கான கதை: ரோமஸ ரிஷி வசுதேவ தேவகிக்கு உபதேசித்ததாக கூறுகிறது. கையில் ரக்ஷைக் கட்டிக் கொள்வது வேண்டிய நற்பலன்களைக் கொடுக்க வல்லது. பிரதிஸரக் கயிறு வெள்ளி (அ) பருத்தி நூலில் ஆனது பிராமணர்களுக்கு வஸ்திரதானம் செய்ய வேண்டும். இரவு முழுவதும் கண்விழித்து பூஜிக்க வேண்டும். ஹோமம் சிவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறித்து செய்ய வேண்டும். நல்லெண்ணை, அக்ஷதை, நெய், ஹோமத்தில் விட வேண்டும். இந்த விரதப் பலனாக கிருஷ்ணன் பிறந்ததாக சொல்லப்படுகிறது.

9. பிரதோஷ விரதம்

15 நாளுக்கு ஒருமுறை விரதம் எடுப்பர்; அந்த நாள் முடியும் வரை உண்ணாமல் இருக்க வேண்டும். சூரிய அஸ்தமனத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன் ஸ்நானம் செய்து வெள்ளை உடை தரித்து நந்தியை ஜபம் செய்து சிவபூஜை செய்ய வேண்டும். சிவனுக்கு வலப்புறம் கணேசர், இடப்புறம் ஸ்கந்தனும் பிரதிஷ்டை செய்து ந்யாஸம் செய்து ''ஸோஹம்பாவனை''யுடன் இருக்க வேண்டும். சக்தியையும் வழிபட வேண்டும். ப்ரஹ்மஹத்தி தோஷம் அகலும். செல்வம், வித்யை, வெற்றி, பிள்ளைப்பேறு, ஆரோக்யம் முதலியவை கிட்டும். பிராமணர்களுக்கு விஷேசமானது. கலிதோஷம் நீக்க வல்லது.

10. சனித்ரயோதசி

சனிவாரமும் த்ரயோதசியும் கலந்த நாளில் (சனிப் பிரதோஷ தினம்) செய்யத்தக்கது. சிராவண (ஆவணி) கார்த்திகை மாதங்களில் விசேஷம். சிவனை லிங்க வடிவில் பூஜை செய்தல். மத்தியான காலத்தில் பூஜை விசேஷம். பிறகு மாலை லிங்க பூஜை. எள்ளும், நெய்யும் விசேஷ திரவியங்கள். ஸ்வயம்பூ லிங்கம், காடு, கிராம வெளிப்புறம், மலையுச்சி (அ) தபோவனங்களில் உள்ள லிங்கங்களுக்கு பூஜை செய்தல் உத்தமம். காசியில் உள்ள சிவலிங்க பூஜை மிகவும் விசேஷமானது. 32 தீப வரிசைகள் (அ) 1000 விளக்குகள் ஏற்றி சிவனின் 100 நாமாக்களை உச்சரிக்க வேண்டும். இதன் கதை: வித்யாதர அரசன் சித்ரகன் கைலாசம் சென்று சிவனை இகழ்ந்தான். பார்வதி வெகுண்டு அவனை மனித குலத்தில் பிறக்க சாபமிட்டாள். அவன் வ்ருத்ராஸுரனாகப் பிறந்தான். இந்திரன் சனிப்பிரதோஷ விரதம் இருந்து, பலம் பெற்று வ்ருத்ரனைக் கொன்றான்.

11. சோமவார விரதம்

சிவ விரதம்; இதற்கான கதை: ஆர்யாவர்த அரசன் சித்ரவர்ணன் பெண் 14 ஆம் வயதில் விதவையாவாள் என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜோசியர் கூற, அவள் மணம்புரிந்து அவளது கணவன் இந்திரசேனன் அவ்வாறே கப்பல் கவிழ்ந்ததால் இறக்க, யாஜ்ஞுவல்க்யர் உபதேசித்த வண்ணம் சோமவாரம் விரதம் இருந்து வந்த அவள், கணவன் இறந்த பின்னால் அந்த விரதத்தைத் தொடர, அதன் பயனாக அவள் கணவனை மீண்டும் பெற்று இருவரும் மகிழ்வுடன் நீண்ட காலம் வாழ்ந்தனர்.

12. அமா சோமவார விரதம்

அமாவாசை கூடிய திங்கட்கிழமை தினத்தில் அரசமரம், சிவன், விஷ்ணுவுக்கு பூஜை செய்தல். பாபம் ஒழியும். வம்சம் விருத்தியாகும். விதவைத் தன்மையை, இப்பிறவி மறுபிறவி களிலும் போக்க வல்லது. பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு இது குறித்து கூறிய கதை : தேவஸ்வாமி என்ற பிராமணர், அவர் மனைவி தர்மவதி - இவர்களுக்கு 7 பிள்ளைகள்; ஒரு பெண். பிள்ளைகள், ஒருநாள் பிராமணனுக்கு உணவளித்து ஸௌபாக்யம் பெற்றனர். பெண் அதை செய்யாததால் விதவையாகும்படி விதிக்கப்பட்டது. ஆனால் அவளுடைய சகோதரர்கள் சமுத்திரத்தைக் கடந்து சிங்களத்திலிருந்து சோமத்தைக் கொண்டு வந்து, அப்பெண் சோம விரதம் பூண்டு தாம்பத்ய தோஷத்திலிருந்து மீண்டாள்.

13. பக்தேச்வர விரதம்

இது பௌர்ணமியில் செய்வது. குழந்தை பேறு பெற பெண்கள் அர்க்யம் செய்வது. கதை : மதுரை அரசன் சுந்தரபாண்டியன்; அரசி குமுதவதி. சிவன் குறித்து தவம் செய்து பிள்ளைவரம் பெற்றனர். இந்த பிள்ளை நல்ல குண -நலன்களுடன் சொற்ப ஆயுளுடன் இருப்பான் என சிவன் கூற, அவர்கள் அவ்வாறே பெற்று அவனை அரசன் மித்ரஸஹஸ்ரன்– அரசி கலாவதியின் பெண்ணுக்கு மணமுடித்து அப்பெண் பக்தேச்வரவிரதம் இருந்து கணவனை காலனின் பிடியில் இருந்து விடுவித்து பல வருடகாலம் இன்புற்று வாழ்ந்தனர்.

14. கேதாரேச்வர விரதம்

இது ஐப்பசி மாதம் அமாவாசையன்று கையில் விரதசரடு கட்டிக்கொண்டு இனிப்புகள் வழங்கி அனுஷ்டிக்கப்படுவது. இதன் கதை : சிவன் முன்னால் பிருங்கி தவறாக நடனமாட,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைக் கண்டு மற்றவர் சிரிக்க, சிவன் மட்டும் புகழ, பிருங்கி பார்வதியை விட்டு சிவனை மட்டும் வலம் வர பார்வதி கைலாசத்தினின்றும் வெளியேறி கௌதமரின் ஆசி பெற்று வந்து அங்கு அவர் உபதேசப்படி கேதாரேச்வர விரதம் இருக்க, சிவன் தானே வந்து அவளுக்கு தன் உடலில் பாதியை தந்து இணைபிரியாமல் இருக்க அருளினார். ஆகவே சிவன் பார்வதி இணையாக சேர்ந்து இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சித்ராங்கன் மனைவி புண்யவதி இந்த விரதம் இருந்து பல நன்மைகளைப் பெற்றார்.

15. உமாமஹேஸ்வர விரதம்

பாத்ரபத (புரட்டாசி) மாதம், சுக்ல சதுர்தசியில் விரத தினத்துக்கு முன்னாள் ஆரம்பம். விரதத்திற்கு முன் ஸ்நானம் செய்து அனுஞை (அனுமதி) பெற்று பூஜை செய்ய வேண்டும். மறுநாள் காலை நித்ய பூஜை முடித்து இந்த பூஜை தியானம், ஆவாஹனம், பாத்யம், அர்க்யம் முதலிய உபசாரங்கள் செய்து கையில் ரக்ஷை கயிறு கட்டி, முழுநாள் உண்ணாநோன்பு இருந்து இரவு முழுவதும் கண் விழித்து பூஜை செய்து ஒவ்வொரு ஜாம முடிவிலும் இவ்வாறு செய்து அக்னியில் ஹோமம் செய்து விரதம் முடிக்க வேண்டும்.

கௌதமர் சொன்ன கதை : துர்வாசன் விஷ்ணுவுக்கு வில்வமாலை பரிசளித்தார். அதை விஷ்ணு கருடன் மீது வைத்தார். ரிஷி கோபித்து லக்ஷ்மியிடமிருந்தும், கருடன் வைகுண்டத்தில் இருந்தும் அவருக்கு பிரிவை சபித்தார். பிரஹஸ்பதி சொல்படி விஷ்ணு உமாமஹேஸ்வர விரதம் இருந்து தான் இழந்தவற்றை திரும்பப் பெற்றார்.

16. சிவராத்ரி விரதம்

சிவனுக்குரிய முக்கிய விரதம். மாசிமாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்தசி இரவில் செய்வது. திதி நண்பகல் நேரம் பூரா இருக்க வேண்டும். இது சிவன் முதலில் லிங்கவடிவான தினம். உபவாசம், கண்விழித்தல் சிறப்பானது. ஒவ்வொரு ஜாமத்தின் முடிவிலும் சிவபூஜை அர்க்யம், பாத்யம் முதலியவைகளுடன் செய்யப்பட வேண்டும். விரதம் முடிந்து பாரணை (சாப்பாடு) அடுத்த நாள் பகலில் இந்த விரதம் எதிர்பாராத பொழுது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போகக்கூடிய விதமாக செய்தாலும் உரிய பலனைக் கொடுக்க வல்லது. இதன் கதை : மிருகங்களைக் கருணையின்றி கொன்று வாழும் வேடன் ஒருவன் ஓர் இரவு ஒரு வில்வ மரத்திற்கு வந்து அங்கு தான் கண்ட ஆண் மானைக் கொல்ல முயற்சிக்கையில், அந்த மான் மனிதக் குரலில் தன் மனைவியிடம் சொல்லிவிட்டு வருவதாக சொல்ல, அவன் அதை அனுமதித்து வில்வமரத்தில் அமர்ந்து அதன் இலைகளை பறித்து பொழுதுபோக்காக கீழே ஒன்றன்பின் ஒன்றாக போட்டான். சில நேரம் கழித்து பெண் மான் தன் துணையைத் தேடி வந்ததும், அவ்வேடன் அவ்வாறேஅதை ஆண்மான் என எண்ணி கொல்ல முயற்சிக்க, அது மனிதக்குரலில் தன் கணவரிடம் சொல்லி வருவதாக கூற அவனும் சரி என அனுப்பி, முன்படி வில்வ இலைகளை கீழே போட, இவ்வாறு இரவு முழுவதும் கண் விழித்து உண்ணாமல், வில்வ இலைகளைப் போட அவை மரத்தின் கீழே இருந்து சிவலிங்கத்தின் மீது விழ அதுவே சிவார்ச்சனமாக ஆயிற்று. அவன் கண் விழித்து உண்ணாவிரதம் இருந்து வில்வார்ச்சனை செய்தது மாசி மஹாசிவராத்ரியானதால், சிவகணங்கள் அடுத்த நாள் காலை அந்த வேடுவனை எல்லாவித மரியாதைகளுடன் சிவபோகத்திற்குக் கூட்டிச்சென்று பெருமைப்படுத்தினர். தன்னை அறியாமல் பொழுதுபோக்காக செய்த மஹாசிவராத்திரி விரதத்தின் மஹிமையால் இந்த வேடன் உயர் பதவியடைந்தான்.

மேற்கூறிய விரதங்களைத் தவிர சிவசதுர்த்தி விரதம் (ஒவ்வொரு மாதமும்), அநங்கத்ரயோதசி விரதம், பாசுபத விரதம் ஆகியவையும் சைவர்கள் அனுஷ்டிக்கும் சில முக்கிய விரதங்கள் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ŚIVARĀTRI : THE VRATA PAR EXCELLENCE

T.N. RAMACHANDRAN

Mahākavi Bhārati sang thus :

நோயிலே படுப்பதென்ன கண்ணபெருமானே – நீ
நோன்பிலே உயிர்ப்பதென்ன கண்ணபெருமானே !

This passage may roughly be translated thus :

"O Lord Kaṇṇa (Kṛṣṇa), how is it that you lie abed besieged by malady ? How then is it, O Lord Kaṇṇa, that you stand resusciated by *nōṉpu* ?" (The Tamil word for *vrata* is *nōṉpu)*

Such is the power of *vrata*. It can revive, regenerate and reanimate. It can also spiritually rejuvenate. No wonder, hundreds of *vratas* are prescribed for the Hindus. P.V. Kane speaks of about 1,250 *vratas.*[1]

The word '*vrata*', it is said, is derived from the Sanskrit root *vṛ*, which means 'to will' or 'to choose'. So, 'will' or what is willed is the essence of *vrata*. By extension *vrata* includes 'vow', 'religious obligation' and 'performance of rite'.

Śivarātri is a *vrata* which is associated with *rātri* (night). Another *vrata* which lasts beyond a sennight is Navarātri. These *vratas* are performed during nights. Night, it is well-known, is fraught with mysterious significance. Normally night is deemed to be the sabbath of mankind, the period when body and mind should rest. Exceptionally

1. *History of Dharmaśāstra*, Vol.V, part 1, pp. 253-462.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

both body and mind should be active during some nights.

Sable-vested night, says John Milton is the 'eldest of things'. The calm, majestic presence of night married to the serene heaven is capable of extraordinary animation if the soul is willing to get impregnated with the elixir of devotion. It is of such a night which can mother a myriad mystical tremendums, the Upaniṣad affirmed: '*tamaso mā jyotirgamaya*'. When a night of this potency is doubled with a *vrata*, the outcome is bound to be great and grand.

Of the *vrata* of Mahāśivarātri, J. Bruce Long observes : "In the strictest technical sense of the term a *vrata* is a vow or a sacrifice, in which one offers a part of oneself (through fasting, prayer, meditation etc.) or a portion of one's goods, to God as a thanks-offering and as a petition for some desired boon. Or it might take the form of a discipline engaged in for the purpose of promoting physical and mental self-control"[2]. One can see many different types of motivation at work in the Śivarātri *vrata*; acts of penance and contrition, acts of thanks-giving and praise, and acts of a 'magical' manipulation to please the deity and to persuade him to recompense the devotee for his efforts with appropriate benefits.

Śivajñāna Siddhiyār (Supakkam, v.182) affirms :

வானிடத்தவரு மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்...

"The celestials come down to the earth to perform *pūjā* unto Śiva".

---

2. 'Mahasivarātri' by J. Bruce Long in *Religious Festivals in South India and Sri Lanka*, Manohar, New Delhi, 1982.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

It is said that this worship is done every night which is why no one is allowed to stay within the temple once the *ardhajāma pūjā* (which is akin to compline) is over. The one and only night when human devotees can be present in the temple is Śivarātri. Obviously this single night is worth all the other 364 nights of the year. So, the devotee should not let this night slip out of his hands. The annual vigil kept on this holy night is comparatively an easy way to gain the greatest blessing. This night, in one sense, is the Dark Night of the Soul of St. John of the Cross.[3]

Only powers which are infernal, choose night for their nefarious operations. Why should Śiva who is the most auspicious choose it ? Why should He enact His dance at midnight, and that too, in the crematory ? "Dance in the darkness", says Sivaramamurthi, "is unimaginable".[4] However Śiva forever dances in the funeral pyre of the crematory at midnight. For this reason St. Manikkavāchakar hails Him thus : "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே !" (O Lord who enacts the dance at midnight !)

In this context it is good to remember that Śiva is the Lord of the destitute and the down-trodden. Things abandoned are dear to Him. A *res nullius* is sacred to Him. The crematory and the charnel house are His favourite haunts; The *white madar* (வெள்ளெருக்கு) – the

3. *Dark Night of the Soul, St. John of the Cross*, tr. by E. Allison Peers, Image books, 1959, p.55
4. *Nataraja in Art, Thought and Literature*, National Museum, New Delhi, 1974.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ever-condemned flower—is sweet to Him. Charred bones are His jewels. A garland of skulls is much prized by Him. Matted hair is deemed sacrosanct by Him. He covets not silken vestments. He is a naked ascetic. Sometimes His loin is girt with a tiger-skin. He is not after powder and perfume. The ashes of burnt corpses are held by Him in great esteem. Night, in particular midnight, is truly sacred to Śiva. It is His favourite hour. No wonder it is, that He chose the dark hours of the night for His worship. Śiva is a *niśācara*. So are His hosts of Bhūtas and Piśācas—all vagrants of the night. Śiva the incomprehensible, in the fitness of things, is best meditated during *ardharātri* as the Mahāyogin.

Of the 365 nights of the year, which night is to be reckoned as Mahāśivarātri ? which is the night that manifests the sought-after *kairos*—the time of grace ? Hinduism, it is well-known, attaches great importance to the ritual hour. In fact, its almanac is so designed and worked out that it furnishes all the data that point to the appearance of 'the sacred' in time[5].

We have a pentad of Śivarātris. The monthly Śivarātri is to be distinguished from the annual which alone goes by the name 'Mahāśivarātri'. Each month is made up of a couple of *pakṣas* (fortnights), they being the dark and the white fortnights. The *kṛṣṇapakṣa caturdaśī* that occurs every month marks the monthly Śivarātri. The *kṛṣṇapakṣa caturdaśī* occurring in the month of Māśi (Feb - March) marks the Mahāśivarātri. In other words, the

---

5. 'Mahasivaratri', *op.cit.*, p.193

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Mahāśivarātri falls on the fourteenth lunar day (*tithi*) of the dark half of Māśi. This Mahāśivarātri is unique which is presided over by Tiruvōṇam, the asterism dear to Viṣṇu.

The other three Śivarātris are Nitya, Pakṣa and Yoga Śivarātris. We have seen that *caturdāśī* occurs twice a month. There are twenty-four *caturdāśī*s in a year. Each of these is a Śivarātri, *sui generis*. This is called the Nitya Śivarātri. The worship commencing from the *kṛṣṇapakṣa prathamā* in the month of Tai (Jan. - Feb.) should be continued for thirteen days and this should terminate with the *trayodaśī*. This indeed is known as the Pakṣa Śivarātri. The *amāvāsya* which falls on a Monday is also deemed a Śivarātri. This goes by the name Yoga Śivarātri.

The origin or Śivarātri is traced as follows in the *Kandapurāṇam*. It is dealt with in 'Aṭimuḍi Tēṭiya paṭalam'. The narrator is Brahmā Himself. Admonishing Dakṣa whose sacrifice ended in a fiasco, Brahmā said :

"O Dakṣa, you spoke pejoratively of Lord Śiva and courted despicable chastisement. Befuddled you landed yourself in trouble. Even Viṣṇu and I were not exempt from this bewilderment'. This said, Brahmā subjoined ! 'When a thousand *caturyugas* pass away, it marks the passage of a day's time for me. With the advent of night I begin to slumber. Then the sun, the moon, the planets, the stars, Indra, his hosts and the lives in the cosmos meet with their doom. When once this happened the *munis* of the higher realm fled to Janaloka in fright. Then all the ocean-streams rose up and swallowed all places

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

save such sacred towns like Kāśī and Kañci. Viṣṇu was then reposing on a banyan-leaf that floated in great deluge. The *munis* of the Janaloka approached him, invoked him and sang his praises. He bestirred himself from his slumber. He could no longer behold the earth as it had sunk to the nethermost world. So he assumed the form of gargantuan boar, plunged into the Pātāla, retrieved the earth, bore it on his tusk, surfaced up and re-established the earth which resumed its former poise. By then a thousand *caturyugas* had passed away. I woke up and engaged myself in the activity of creation. Viṣṇu felt extraordinarily proud as he was able to retrieve the earth. He then commenced his Yogic slumber. I too felt excessively proud as I thought that lives perished when I slumbered and revived when I woke up. I concluded that I was the supreme *Ens*. I woke up the slumbering Viṣṇu and questioned him thus : 'Who may you be ?' He said he was my father. This I knew. Yet in my drunken elation I denied what he affirmed. I asserted that I was indeed the *Ens Eutium*. Then a tussle ensued between me and Viṣṇu. We staked everything in our fight. Viṣṇu aimed at me a weapon which he had received as a gift from Lord Śiva. I parried it with the one gifted to me by Lord Śiva. The two weapons went about burning eveything. The earth and the heaven were alike ablaze. As we fought furiously against each other, Nārada emerged from my visage and said : 'Neither of you should think you are the supreme. You fight with the weapons gifted to you by Śiva. However you have in your pride forgotten Śiva, the supreme. If your fight continues, Lord Śiva will manifest before you as a column of fire'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

We ignored the words of Nārada and our fray thickened. For a thousand years our fight went on, day and night. It was then during a *krișṇapakṣa caturdaśī* at midnight a mountain of fire arose before us. It swallowed clean our weapons. The heat that radiated from it was beyond endurance. We gave up our fight and beheld from at a distance the mountain, in wonder. Then a celestial, unbodied voice proclaimed thus : 'O ye little boys ! Lord Śiva will judge your strength and valour. Try to reach the top or the bottom of this mountain of fire'. We then decided thus: Whoever first reaches the top or the bottom is to be deemed the supreme God. I incarnated as a swan and flew up. Viṣṇu became a boar and burrowed into the earth. It was labour that met with no end. He stood denuded of his strength. He owned his defeat. With a contrite heart he prayed to Śiva who forgave him his presumptuousness and enábled him to surface up. I, on my part, was winging the buxom air for a millennium, all in vain. I was fatigued. Vertigo possessed me. It was then I saw saintly persons like unto Siddha-puruṣas emerge from the flame. They said : 'Will this swan ever eye the peak of this supernal flame ? After some time this poor bird will give up its ghost. Look at the fate of Viṣṇu. He, as a boar, bored into the earth laboriously. Ere long he became alive to his presumptuousness. By his contrition he has gained the Lord's benediction. This befuddled fowl can survive if only Lord Śiva chooses to cure its bewilderment'.

Harkening to this I realised my folly. I gave up my arrogant quest then and there. I hymned the glory of Lord Śiva. I approached Viṣṇu and said : 'You are not the

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

supreme one; nor am I. It is Śiva who is the one and only true God. Let us adore Him''.

Thus, even thus, did Brahmā and Viṣṇu come to own Śiva as the Supreme Lord. The night during which Lord Śiva manifested as a mountainous column of fire became the sacred Śivarātri. The mountain column of fire then came to abide as a ruddy mountain hight Arunachalam.

The *Kanda purānam* (III 21.96) speaks thus of the divine event :

''அரியும் யானும் முன்தேடும் அவ்வனல்கிரி அனல
கிரியெ னும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவ தேசிவராத்திரி யாயினது இறைவற்
பரவி யுய்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும்.''

By the grace of Lord Śiva the theomachy terminated in the theophany.

Referring to the futile search of Brahmā and Viṣṇu and the consequent theophany, St. Appar (தேவாரம், ஐந்தாம் திருமுறை *95.11*)[6] sings thus :

6. The term Śivarātri gained currency many centuries after the occurrence. Hence, the term, Śivarātri, is not met with, in the *Tevāram* hymns. But many references to the occurrence are invariably found in all the *Tevāram* decads. The ninth verse in each of St. Sambandhar's decads makes a pointed reference to this. Very many, indeed are the reference made by St. Appar to his event, though these are fewer than St. Sambandhar's. References made by St. Sundarar are obviously fewer than those of St. Appar's. According to a rough reckoning, there are as many as five hundred references in *Tevāram*.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்குஞ் செஞ்சடைப் புண்ணியமூர்த்தி"

"Between themselves the red-eyed Viṣṇu and Brahmā pursued everywhere their quest, all in vain. To them, in the form of *linga*, the just and righteous Lord of swelling, ruddy, matted-hair manifested, saying, 'behold Me here!"

It is this theophany of Śivarātri that is celebrated by the opening words of *Tiruvempāvai* thus : "ஆதியும் அந்தமு மில்லா அரும் பெரும் சோதி..... "

Chapter 38 of the *Śivapurāṇa* deals with the greatness of Mahāśivarātri. How the *vrata* of Śivarātri is to be concluded is dealt with in the next chapter. Chapter 40 celebrates the glory of Śivarātri.[7]

Chapter 17 of the *Linga Purāṇa* celebrates the theophany which Lingodbhava.[8]

According to Bruce Long, the works dealing with Śivarātri are the *Mahābhārata*, the *Garuḍapurāṇa*, the *Padmapurāṇa*, the *Skandapurāṇa* and the *Śivarātri Māhātmya*. It is rather unfortunate that he should omit to mention such Āgamas as *Vātula, Kāmika, Kāraṇa, Lalita, Kiraṇa, Jaya, Suprabheda* and *Dīpta* and Upāgamas as *Kālottara* and *Kālanirṇaya*, and Purāṇas like *Bhaviṣyottara* and *Vāyu*.

---

7. *Sivapurānam*, Tr. A Board of Scholars, Vol. III, pp. 1422-439.
8. *The Lingapurāna*, part I, chap. 17, pp. 58 - 64.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Besides these, there are two works in Tamil, both bearing the same title viz., "*Sivarātri Purāṇam*". It is from Sri Lanka these works originate. The Purāṇam indited by Nellainathar was first published in 1881 at Madras. This work of 303 verses is in five cantos. This is inferior to the other work, the one by Varadarāja Kavirāja, also known as Varada Paṇḍita, a Brahmin who flourished about 275 years ago. Siva Sri Ma. Kumarasooriyapillai, also of Sri Lanka, wrote a commentary and the work with the commentary was first published in 1913.

An improved third edition was brought out in 1970 by Maravanpulavu Mu. Ganapathipillai. This work of nine *sargas* comprises 714 verses. This work, says its author, was indited at the behest of the Tillai-Brahmins in conformity with the enunciation of the *vrata* by the Āgamas. "தில்லை வனத்து அறிஞர் திருக்கடைக்கண் நோக்கி .... நீ ஆகம நூல் வழாமல் பந்தம் அறுத்திரு சிவராத்திரி விரத சரிதை தனைப் பாடுக என்னச்..... செப்பலுற்றேன்" — are the words of the author. This *opus* is in exquisite Tamil and each verse dances like Naṭarāja. Our Kavirāja refers to Śivarātri as Śivaniśi and also Araṉ Yiravu.

Śivarātri is also referred to as a festival (*utsava*) and in certain places, dance and song and the like form part of the celebration. It is not a festival in the strict sense. It is a *vrata* (vow) which should be undertaken by every Saivite. It must be fulfilled with care and devotion. Contrition and sincerity should inform the performance of the *vrata*. This *vrata* is to be held as a sacred and inviolable duty. The *vrata* is undertaken to quell the mutinous flesh and domesticate the rebellious spirit. When

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

gods themselves behave like the proverbial unteachable monkey, what can we say of man ? He should forever be on his guard.

Śaiva Siddhānta says that every soul suffers from the blemish of *āṇava mala*. This *mala* is truly the ancestral blindness of the soul. Before this darkness which is all-pervasive, the physical darkness can be deemed as light itself. This *malam* is '*iruḷ*' (murk) and is curable only by Śiva's '*aruḷ*' (grace). The soul is ever found enmeshed in this murky *mala*. This murk is the author of vanity and pride which, in their turn, plunge the soul in deeper and deeper darkness. From such dense darkness symbolised by the midnight of *kṛṣṇapakṣa caturdaśī*, light supernal is manifested. This indeed is the message of the Mahāśivarātri *vrata* : '*tamaso mā jyotir gamaya*'. For this blessing the soul is sempiternally indebted to Lord Śiva. The recognition of this indebtedness assumes the form of *upavāsa*, *pūjā* and *jāgaraṇa*. By these three, the soul of triple *malas* propitiates the triple-eyed Lord who cause the darkest hour to give birth to celestial lucency. It is in this sense the Śivarātri is deemed an *utsava* (festival). The conquest of the *āṇavamala* is celebrated by the manumitted souls in gladness and gratitude. In fine, this *vrata* is penance, perseverance and conquest—all rolled into one.

The *vrata* is observed with vigil during the four *yāmas* (watches of the night). Simultaneous and continual *abhiṣeka* to the *liṅga* installed in the *adytum* is performed. *Pañcāmṛta* and *pañcagavya* are offered to Pañcānana (Śiva) by devotees who are subject to *pañcāvasthā* (five states).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

It is only after the successful termination of the *vrata*, the fast is broken and the feast of tasting *śivaprasāda* takes place. Thus the soul imbibes Śiva and comes to have its being in Śiva.

Śivarātri, though a *vrata*, is yet neither *voltum* which is vow wherein the worshipper undertakes to make an offering when a particular request has been granted, nor *devotio* which is payment made in advance to ensure the bestowal of a benefit. It is adoration offered to the Supreme who is at once awe-inspiring and fascinating. The adoration by the devotee is but an expression of his complete dependence or creatureliness. Truly speaking the *vrata* is an enacted prayer, enacted individually and collectively. This *vrata* is observed from time immemorial. The natives of central Australia are heard to say : "It was so in the *Acchearinga*". This is their transcendent reference which gives permanent value and prestige to custom and belief by referring them back to a higher supernatural reality of initial events.[9] Therefore the following words would aptly conclude the article thus : "Śivarātri ! O the night that enlightened Brahmā and Viṣṇu."

9. *Comparative Religion* by E.O. James, Methuen, London, 1961, p. 304 .

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவராத்ரி - ஒப்புயர்வற்ற விரதம்

T.N. ராமசந்திரன்

(கட்டுரைச் சுருக்கம்)

'விரதம்' என்பது தமிழில் நோன்பு எனப்படும். மஹாகவி பாரதியார் 'நோயிலே படுப்பதென்ன, கண்ண பெருமானே - நீ நோன்பிலே உயிர்ப்பதென்ன கண்ண பெருமானே' என்று பாடியது நோன்பின் சிறப்பினை எடுத்துரைக்கும். பி.வி. கானே என்பவர் 1250 விரதங்களைப் பற்றி எடுத்துரைத்துள்ளார். 'விரதம்' என்ற சொல் வடமொழி 'வ்ரு' என்ற வினைப்பகுதியினின்றும் 'விரும்புவது', 'ஏற்பது' என்ற பொருளில் பரிணமித்துள்ளது. ஆகவே விரதம் விரும்பியதை அடைய மேற்கொள்ளும் உடலையும் மனத்தையும் செம்மைப்படுத்தும் செயல்முறையாகும்.

சிவராத்திரி 'இரவு' தொடர்புள்ள ஒரு விரதம் (நோன்பு). நவராத்திரியும் அவ்வாறே (ஏழு இரவுகளுக்கு மேல் கடந்தும்) தொடரும் விரதமாகும். இந்நோன்புகள் இரவு காலங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன. பொதுவாக இரவு உடலுக்கும், மனதிற்கும் ஒய்வு கொடுக்கக்கூடிய நேரம். இதற்கு சில புலனுக்கெட்டாத சிறப்பு உண்டு.

'இருள்சூழ் இரவு எல்லாவற்றிலும் முதன்மையானது' என்று மில்டன் கூறுவார். அமைதியான இரவு நிர்மல வானுடன் கலந்து பக்தியென்னும் அமுதத்தை ஏற்று மகிழும் ஆன்மாவிற்கு ஓர் புத்துயிர் அளிக்க வல்லது. அத்தகைய இரவு பலவித ஆன்மீக அதிர்வுகளை பிறப்பிக்க வல்லது. உபநிஷத் அறுதியிட்டுக் கூறுகிறது : ''தமஸோ மா ஜ்யோதிர்கமய'', ''இருளினின்றும் ஒளிக்கு என்னைக் கொண்டு செல்'' என்று. இத்தகைய ஆற்றல் பெற்ற இரவு, நோன்பின் மூலம் இரட்டிப்பு ஆற்றல் பெறின் அதன் பலன் மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் ஆவது உறுதி.

சிவராத்ரி நோன்பு குறித்து ஜே. ப்ரூஸ் லாங் கூறுவது: 'நோன்பு அல்லது விரதம் நுண்ணிய பொருளில் 'கோட்பாடு' அல்லது 'தியாகம்' ஆகும். இதில் ஒருவன் தனக்குறியனவற்றுள் ஒரு பகுதியையோ (உண்ணாமை, பிரார்த்தனை, தியானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலியன மூலம்) தனது பொருள்களில் ஒரு பகுதியையோ கடவுளுக்கு நன்றிக் கடனாகவோ அல்லது விருப்பப்பட்ட வரம் வேண்டியோ அர்ப்பணிக்கிறான்''. சிவஞான சித்தியார் அறுதியிட்டு கூறுவது : ''வானிடத்தவரும் மண் மேல் வந்து அவனை அர்ச்சிப்பர்''. இந்த வழிபாடு ஒவ்வொரு இரவிலும் நடைபெறுகிறது என்றும், ஆகவேதான் அர்த்தஜாம பூஜைக்குப் பின்னர் இரவில் கோயிலுக்குள் எவரும் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை எனக் கூறப்படுகிறது. மானுட பக்தர்கள் கோவிலுக்குள் இரவில் தங்கி வழிபடுவது இந்த ஒரு சிவராத்ரி இரவில் மட்டுமே.

நரகத்துக்குட்பட்ட சக்திகள் தங்கள் தீய செய்கைகளுக்கு இரவை தேர்ந்தெடுக்க, மிகவும் மங்களகரமான சிவனார் ஏன் இதை தேர்ந்தெடுத்தார் ? ஏன் அவர் தனது நடனத்தை நடுநிசியில் அதுவும் மயானத்தில் ஆடுகிறார் ? சிவராமமூர்த்தி சொல்வது, ''இருட்டில் நடனம் கற்பனைக்கும் எட்டாதது'' இருப்பினும் சிவன் எப்பொழுதும் மயானச் சிதையில் நடுநிசியில் நடனம் புரிகிறார். இதன் காரணமாக மாணிக்க வாசகர் அவரை ''நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே'' என்று புகழ்கின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் சிவன் அநாதைகள் மற்றும் கீழ்நிலையில் புறக்கணிக்கப்பட்டு கைவிடப்பட்டோரின் தலைவன் என்பதை நினைவு கூற வேண்டும். (மற்றவர்களால்) புறக்கணித்து விடப்பட்ட பொருட்கள் அவனுக்கு விருப்ப மானவை — மழு அவனுக்குப் புனிதமானது. இடுகாடும், சுடுகாடும் அவனுக்குப் பிடித்த இருப்பிடங்கள் எப்பொழுதும் தூற்றப்படும் வெள்ளை அரளி (மஞ்ஜிஷ்டம்) அவருக்குப் பிடித்தது. கருகிய எலும்புகள் அவருக்கு அணிகலன். மண்டை ஓட்டு மாலை அவருக்கு மிகவும் உயர்ந்தது. சடைமுடி மிகவும் புனிதமானது. அவர் பட்டாடைகளை விரும்புவதில்லை. அவர் நிர்வாணமான யோகி. (அவதூதர்) சில சமயம் புலித்தோலினால் ஆன கீழாடையை அணிவார். அவருக்கு வாசனை திரவியங்களில் நாட்டம் இல்லை. எரியூட்டிய சவங்களின் சாம்பலையே அவர் போற்றி அணிகிறார். சிவனுக்கு நள்ளிரவு மிகவும் புனிதமானது; மிகவும் பிடித்த காலம். ஆகவே இந்த நள்ளிரவே அவர் தனது பூஜைக்காக தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை. சிவன் இரவில் விழித்து செயல் புரிபவர். (நிசாசரர்). அவ்வாறே அவரது பூதகணங்களும் பிசாசங்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரவில் அலைந்து சுற்றித்திரிபவை. கருத்திற்கும் அறிவிற்கும் எட்டாத சிவன் மஹாயோகியாக சிறப்பாக நள்ளிரவில் (நடுநிசியில்) தியானிக்கப்பட வேண்டியவர்.

நமக்கு ஐவகை சிவராத்திரிகள் உள்ளன. மாத சிவராத்ரி எனப்படுவது, ஆண்டுக்கொருமுறை வரும் மஹா சிவராத்திரிய னின்றும் வேறுபட்டது. ஒவ்வொரு மாதமும் தேய்பிறை (கிருஷ்ணபக்ஷ) சதுர்தசி (14ஆம் நாள்) மாத சிவராத்திரி ஆகும். மாசி மாதம் (பிப்ரவரி - மார்ச்) தேய்பிறை சதுர்தசி மஹாசிவராத்திரி எனப்படும். இந்த சிவராத்திரி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தனித்தன்மை கொண்டது.விஷ்ணுவுக்கு உகந்த நட்சத்திரமான திருவோணம் நட்சத்திரம் கூடி வருவது. மற்றைய மூன்று சிவராத்ரிகள் நித்ய, பக்ஷ யோக சிவராத்ரிகள் ஆகும். சதுர்தசி மாதம் இருமுறை வரும் வருடத்திற்கு 24 சதுர்த்தசிகள் ஒவ்வொன்றும் சிவராத்ரி எனப்படும். இது *''நித்ய சிவராத்ரி''* எனப்படும். தை மாத (ஜனவரி - பிப்ரவரி) கிருஷ்ணபக்ஷ பிரதமை முதற்கொண்டு 13 நாள் திரயோதசி முடிய பூஜை செய்யப்படுவது *''பக்ஷ சிவராத்ரி''* எனப்படும். திங்கட்கிழமையில் ஏற்படும் அமாவாசை அன்றும் சிவராத்ரி என கருதப்படுகின்றது. இது *''யோக சிவராத்ரி''* எனப்பெயர் கொண்டது.

சிவராத்ரியின் தோற்றம் கந்தபுராணத்தில் அடிமுடி தேடிய படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் திருவருளால் கடவுள் இருவர்க்- கிடையான சண்டை உயர்தத்துவமான உயர்கடவுளாக சிவனை அறிவதில் பரிணமித்தது. அப்பர் பெருமானும் இது பற்றிப் பாடியுள்ளார்.

இந்த சிவராத்திரியின் தெய்வீகத் தோற்றம் திருவெம்பாவையில் ஆரம்ப வரிகளில் ''ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும்ஜோதி'' என்று கொண்டாடப்படுகிறது. சிவபுராணம் 38வது அத்தியாயம் சிவராத்ரி மகிமையை விவரிக்கின்றது. சிவராத்ரி விரதம் எவ்வாறு முடிக்கப்பட வேண்டும் என அடுத்த அத்தியாயம் கூறுகிறது. 40வது அத்தியாயம் சிவராத்ரி பெருமைகளை எடுத்துரைத்துக் கொண்டாடுகிறது. லிங்கபுராணம் 17வது அத்தியாயம் இந்த தெய்வீக தரிசனத்தை லிங்கோத்பவ வடிவாக கொண்டாடுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொரு ஆன்மாவும் ஆணவ மலம் என்ற தோஷத்தால் துன்பப்படுவதாக சைவ சித்தாந்தம் கூறுகிறது. இந்த மலம் உண்மையில் ஆன்மாவின் பூர்வீக அறிவின்மை என்ற குருட்டுத்தனம் (பார்வையின்மை). இந்த எங்கும் பரவியுள்ள இரவின் முன்பு பௌதிக இருள் ஓர் ஒளியாகவே கருதப்படும். இந்த மலமே 'இருள்'. அது சிவனின் அருள் மூலமாகவே குணப்படுத்தப்பட வேண்டியது. ஆன்மா இந்த மலத்தில் என்றும் உழன்று (மூழ்கி) சகதியில் அகப்பட்டுள்ளது. இந்த மலம் தற்பெருமை, ஆணவம் இவற்றிற்கு மூல காரணம். இது ஆன்மாவை மேலும் மேலும் அறியாமை என்னும் இருளில் மூழ்கச் செய்கிறது. இத்தகைய ஆழ்ந்த இருளினின்றும் கிருஷ்ண பக்ஷ சதுர்தசி நள்ளிரவின் வடிவமாக, ஒப்புயர்வற்ற அப்பேரொளி தோன்றுகிறது. 'தமஸோ மா ஜ்யோதிர்கமய' இருளிலிருந்து ஒளிக்கு என்னை இட்டுச் செல்க என்ற வாக்கியத்தின் உயர்வினை அறியச் செய்கிறது.

இந்த சிவராத்ரி விரதம் மிகவும் கண்காணிப்புடன் விழிப்புணர்வுடன் இரவின் நான்கு யாமங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது. ஒரே சமயத்திலும், தொடர்பாகவும், கோயில் கர்பக்கிருகத்தில் உள்ள லிங்க வடிவமான சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. பஞ்சாம்ருதமும் (பசுவின் பால், தயிர், வெண்ணை, தேன், சர்க்கரை சேர்ந்த கலவை), பஞ்சகவ்யமும் (பசுவின் பால், தயிர், வெண்ணை, கோமூத்திரம், சாணம்) ஆகிய ஐந்தின் கலவை பஞ்சானனன் ஆன (ஐந்து முகத்தோன் - ஸத்யோஜாதம், வாமதேவ, அகோர, ஈசான, தக்ஷிண) சிவனாருக்கு பஞ்சாவஸ்தை, ஐந்து வித அவஸ்தைகளை [சைசவ (குழந்தைப் பருவம்) கௌமாரம் (இளம் பருவம்), யௌவனம் (வாலிபம்) வார்த்தக்யம் (முதுமை) ம்ருத்யு என்ற ஐநிலைகள்] கொண்ட பக்தர்களால் அளிக்கப்பட்டு வருகிறது. வெற்றிகரமாக விரதம் முடிந்தபின் உண்ணாவிரதம் துறந்து, சிவபிரசாதத்தை ஏற்று உண்டு மகிழ்தல் வேண்டும். இவ்வாறாக இந்த ஆன்மா (ஜீவன்) சிவனை தன்னுள் கொண்டு தானும் சிவனுள் உள்ளதாக உணர்ந்து கொள்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமனாரோபணம்

R. ஸுப்ரமணியன்

நித்யார்ச்சனம்

தனி ஒரு மனிதனுக்கு நீராடுதல், உண்ணுதல், உறங்குதல் என்பவை எவ்வாறு இன்றியமையாதவைகளோ அவ்வாறே பரார்த்தாலயங்களிலும் நித்யார்ச்சனம் என்னும் நாள் வழிபாடு ஒரு வேளை கூட விடமுடியாத ஒன்று. இதற்குப் பெரும் பயன் கூறப்பட்டிருக்கிறது *காரணாகமத்தில் (1.30.1)* :

वक्ष्ये नित्यार्चनं पुण्यं शुल्कं पापनाशनम्।
महापातक दोषघ्नं सर्वयज्ञफलप्रदम्॥

நித்யார்ச்சனம் புண்ணியமானது, நன்மைகளை அளிக்க வல்லது, பாவங்களை விலக்கும், மாபாதகச் செயலால் விளைந்த தீமைகளைப் போக்கவல்லது, எல்லா வேள்விகளின் பயன்களையும் அளிக்கும், என்பது பொருள்.

நித்தியம், ஆகந்துக நித்தியம்

நித்யார்ச்சனம் இரண்டு வகைப்படும். நித்தியம் என்றும் ஆகந்துக நித்தியம் என்றும் பெயர் பெறும். நாள் வழிபாடு நித்தியம் என்றும், பஞ்ச பர்வங்களும், பன்னிரு மாத பூஜைகளும் ஆகந்துக நித்தியம் என்றும் வழங்கப் பெறும்.

नित्यमागन्तुकं नित्यं द्विविधं परिकीर्तितम्।
दिनं प्रत्यर्चनं नित्यं यजेन्मासं प्रति प्रति॥
विशेषयजनं यत्तदागतंनित्यमुच्यते।
अष्टम्याराधनं चैव विषुसङ्क्रान्ति पूजनम्॥
इदमागन्तुकं नित्यमर्चकेनैव कारयेत्।

பன்னிரு மாத பூஜைகள்

பன்னிரண்டு மாதங்களிலும் மாத நட்சத்திரங்களான சித்திரை, விசாகம், மூலம், உத்தராடம், திருவோணம், பூரட்டாதி, அஸ்வினி, கிருத்திகை, திருவாதிரை, பூசம், மகம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தரம் என்னும் இவைகளுடன் பௌர்ணமி கூடியோ, கூடாமலோ மாத பூஜைகளுக்குக் காலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அல்லது எல்லா மாதங்களிலும் திருவாதிரை நட்சத்திரத்திலோ யஜமானனுடைய ஜென்ம நட்சத்திரத்திலோ மாத பூஜையை செய்யலாம் (*காரணாகமம், 1.110.2-4*) :

पुष्यमासे तु पुष्यान्तं माघमासे मघान्तकम्।
उत्तरान्तं तु फल्गुन्यां चित्रान्तं चैत्रमासके॥
विशाखान्तं हि वैशाखे ज्येष्ठके मूलभान्तकम्।
आषाढोत्तराषाढान्तं श्रावणं वैष्णवान्तकम्॥
पूर्वाषाढं हि तन्मासे चाश्वयुङ् मासिचाश्विनी।
कृत्तिकान्तं हि कार्तिक्यां आर्द्रान्तं मार्गशीर्षके॥

ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரங்கள் வந்தால் இரண்டாவது நட்சத்திரம் உள்ள நாளில் மாத பூஜையைச் செய்ய வேண்டும் (*காரணாகமம், 1.110.5*):

एकमासे द्वि ऋक्षे तु अन्त्यर्क्षे व्रतमाचरेत्।

ஆகமங்களில் மாத பூஜைகள்

காமிகம், பூர்வகாரணம், சிந்த்யம், அஜிதம், ஸுக்ஷ்மம், ஸ்வாயம்புவம், உத்தரகாரணம், குமாரதந்திரம் இவைகளுள் மாத பூஜைகள் கூறப்பெற்றுள்ளன. மேற்கூறியவைகளுள் *அஜிதம்* நீங்கலாக மற்றவைகளில் சித்திரை மாதத்திற்குத் தமன பூஜை கூறப்பட்டிருக்கிறது. *ஸ்வாயம்புவம், ஸுக்ஷ்மம், குமாரதந்திரம்* இவைகளில் வைகாசி மாதத்திற்குக் கந்த பூஜை கூறப்பட்டிருக்கிறது. *காமிகம், அஜிதம்* இவைகளில் ''சீதகும்ப விதி'' என்று காணப்படுகிறது. இது *சுப்ரபேதத்தில்* 'காம்யவிதி'யாக கூறப்படுகிறது. *அஜிதாகமம்* நீங்கலாக மற்றவைகளில் ஆனி மாதத்திற்குப் பல பூஜைகள் விதிக்கப்-பட்டுள்ளன. *சுவாயம்புவம், ஸுக்ஷ்மம், உத்தரகாரணம், அஜிதம்* இவைகளில் ஆடி மாதத்திற்கு க்ஷீராபிஷேகம் கூறப்பெறுகிறது. *காமிகம், சுப்ரபேதம்* இவைகளில் ஆடிப்பூர உற்சவமும், *பூர்வகாரணத்துள்* பவித்ரோற்சவமும் காணப்பெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வாயம்புவம், ஸூக்ஷ்மம், உத்தரகாரணம், குமாரதந்திரம் இவைகளில் ஆவணி மாதத்தில் சர்க்கரை பூஜை கூறப்பட்டிருக்கிறது. சிந்தியம், பூர்வகாரணம் இவைகளில் தில பூஜையும், காமிகத்தில் பவித்ர பூஜையும் கூறப்படுகிறது.

ஸ்வாயம்புவம், ஸூக்ஷ்மம், பூர்வகாரணம், உத்தர காரணம், குமாரதந்திரம் இவைகளில் புரட்டாசி மாதத்திற்கு அபூப பூஜையும், சிந்த்யாகமத்தில் தேனோடு கலந்த நெல்பொறி, அன்னம் இவைகளின் பூஜையும் கூறப்படுகிறது. அஜிதம், ஸ்வாயம்புவம், ஸூக்ஷ்மம், உத்தரகாரணம், குமாரதந்திரம் இவைகளில் ஐப்பசி மாதத்திற்கு அன்ன பூஜை கூறப்படுகிறது. பூர்வகாரணத்தில் நெய் அபிஷேகமும், சிந்த்யத்தில் பாலும், திரவியமாகக் கூறப்படுகிறது. கார்த்திகை மாதத்திற்கு எல்லா ஆகமங்களிலும் தீபாரோபணம் காணப்படுகிறது. காமிகத்தில் இது தீபாவளி அன்று குறிப்பிடப் படுகிறது. மார்கழி மாதத்திற்கு அஜிதம், ஸ்வாயம்புவம், சூக்ஷ்மம், காமிகம், உத்தரகாரணம், குமாரதந்திரம் இவைகளில் நெய் அபிஷேகமும் பூர்வகாரணம், சிந்த்யம் இவைகளில் குங்கும பூஜையும் கூறப்பட்டிருக்கிறது. குங்குமம் என்பது இங்கு குங்குமப்பூவைக் குறிக்கும்.

உத்தரகாரணம், குமாரதந்திரம், ஸ்வாயம்புவம், சூக்ஷ்மம் இவைகளில் தை மாதத்திற்குத் தேனபிஷேகமும், பூர்வகாரணம், சிந்த்யம் இவைகளில் கந்த பூஜை என்றும் கூறப்படுகிறது. மேற்கூறிய ஆகமங்களில் எல்லாவற்றிலும் மாசி மாதத்திற்குக் ''க்ருதகம்பளம்'' விதிக்கப்பெறுகிறது. பங்குனி அல்லது சித்திரைக்கு அஜிதத்தில் நவ நைவேத்தியம் கூறப்பெறுகிறது. சுப்ரபேதத்தில் காலம் கூறப்படவில்லை. ஸூக்ஷ்மம், சுவாயம்புவம், உத்தரகாரணம், குமாரதந்திரம் இவைகளில் ததி பூஜையும், பூர்வகாரணம், சிந்த்யம் இவைகளில் புஷ்ப பூஜையும் காமிகத்தில் கந்த பூஜையும் காணப்படுகிறது. இவ்விஷயங்களில் ஆகமங்களுள் ஒத்தகருத்து காணப்படவில்லை.

மாத பூஜைகளின் பலன்

நீண்ட ஆயுள், நோயின்மை, செல்வம், மக்கட்பேறு, புகழ், அபமிருத்யு விலகுதல், செல்வமும் வீடும் கிட்டுதல், விரும்பியவற்றை அடைதல், அந்தணனுக்குத் தவத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

வளர்ச்சியும், அரசனுக்கு மாற்றாரை வென்று வாகை சூடுதலும், நாட்டில் வறுமை விலகுதலும் அம்மை முதலிய நோய் நீங்குதலும், வணிகர்களுக்கு செல்வச் சேர்க்கையும், சூத்திரர்களுக்கு பயிர் செழித்தல் ஆகியவை மாத பூஜையின் பலன்கள் என *அம்சுமதாகமத்தில்* (7.1-5) கூறப்பட்டிருக்கிறது:

आयुरारोग्यमैश्वर्यं धनधान्यविवर्धनम्।
पुत्रश्रीकीर्तिदं नृणां अपमृत्युविनाशनम्॥
भुक्तिमुक्तिप्रदं चैव सर्वकामफलप्रदम्।
विप्राणां च तपोवृद्धिः तथा विद्याप्रदायकम्॥
क्षत्रियाणां जयं चैव परसेनापलायनम्।
लोकेदुर्भिक्षनाशं च महामार्याश्चमोचनम्॥
वैश्यानां धनसम्पत्तिः शूद्राणां कृषिलाभकम्।
किमत्र बहुनोक्तेन सर्वकामार्थ साधनम्॥

மற்ற ஆகமங்களில் மாத பூஜை செய்யாவிட்டால் எல்லாப் பூஜையும் பயனற்றதாகும் என்று கூறப்பட்டிருக்கிறது (*சிந்த்யம், 13-2*) :

मासपूजाविनान्यैश्च पूजनैर्निष्फलं भवंत्।

இதுவரை கூறிய பன்னிரண்டு மாத பூஜைகளுள் சித்திரை மாதத்தில் செய்யப்பெறுவதே தமனோரோபணமாகும். இதைத் தமனோற்சவம் என்றும் வழங்குவது மரபு.

மாத பூஜைகள் வைதிகக் கிரியைகளின் நிழல்கள் எனலாம். போதாயன சூத்திரத்தை அநுசரித்த 'சமாவர்த்தனம்' போன்றது 'பவித்ரவிதி'. இதேபோல 'க்ருத கம்பள விதி' அரசர்களுக்குச் செய்யப்பெற்று வந்தது என *அதர்வபரிசிஷ்டம்* என்ற நூலால் அறியப்படுகிறது. *அஜிதாகமத்தில்* கூறப்படும் ''நவநைவேத்ய விதி'' என்பது ஸ்மார்த்தப் பிரயோகத்தில் ''ஆக்ரஹாயணஸ்தாலீ பாக''த்தை ஒத்தது. 'வஸந்தோற்சவம்' என்பது ஆகமங்களில் கூறப்படுவது. 'ஹோலி' என்பதும் வஸந்தோத்ஸவம்தான். *அம்சுமதாகமத்தில்* கூறப்படும் 'வாஜிநீராஜனம்', 'கஜநீராஜனம்' என்பவைகளை அரசரின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரண்மனையுள் செய்ததாக அதர்வ பரிசிஷ்டம் கூறுகிறது. ஸூக்ஷ்மாகமத்துள் கூறப்படும் 'மத்ஸ்யலீலா' என்பது போதாயன க்ருஹ்யத்துள் விவாஹ ப்ரயோகத்துள் வரும் 'மத்ஸ்யக்ரஹண'த்தை ஒத்ததே.

'புஷ்யாபிஷேகம்' என்பது காமிகாகமத்தில் விதிக்கப் பெறுகிறது. அரசனுக்குச் செய்யப்பெற்ற புஷ்யாபிஷேகத்தை அதர்வபரிசிஷ்டம் கூறுகிறது.

ஆகமங்களுள் கூறப்படும் கர்மங்கள் ச்ரௌதம் ஸ்மார்த்தம் என்பவைகளையும், அரசர்களின் கர்மாக்களையும் அனுசரித்தவை என்பதே கருத்து.

தமனோற்சவத்தின் பிரகிருதி

தமனோற்சவத்திற்கு அல்லது பன்னிரண்டு மாத பூஜைகளுக்குமே பிரகிருதி பவித்ரோற்சவம்தான். பவித்ரோற்சவத்திற்குப் பிறகே தமனோற்சவம் செய்ய வேண்டும் (காமிகம், 2.17.9):

पवित्रप्रकृतिर्यावत् तदनन्तरमुच्यते।

யாகசாலை நிர்மாணம், மண்டலகல்பனம், த்ரவ்ய அதிவாசம், த்ரவ்ய சமர்ப்பணம், அபிஷேகம் போன்ற கர்மாக்கள் இவைகளில் பொதுவானவை.

தமனம் என்னும் சொற்பொருள்

தமனம் என்ற சொல் அடக்குவது என்ற பொருளை உடையது. தமனன் என்று சிவபெருமானையே வேதமும் (தைத்திரீய ஆரண்யகம், 10 : सर्वभूतदमनाय नमः।), மஹாபாரதமும் (அநுசாஸனிகம் 17.13 : महाप्रसादो दमनः शत्रुहा श्वेतपिङ्गलः।) கூறுகின்றன.

தமனத்தின் குணம்

தமனத்தின் குணம் மிகச் சிறப்பானது. அது பற்றி அபிதான நிகண்டுவில் (புஷ்பாதிவர்கம், 51-52) கீழ்க்கண்டவாறு கூறப்படுகிறது :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उक्तो दमनो दान्तो मुनिपुत्रस्तपोधनः।
गन्धोत्कटो ब्रह्मजटो विनीतः कलपत्रकः॥
दमनस्तुवरस्तिक्तो हृद्यो वृष्यः सुगन्धिकः।
ग्रहणाद्विषकुष्ठास्रक्लेद कण्डू त्रिदोषजित्॥

குஷ்டம் முதலிய பெரிய வியாதிகளையும், வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று தோஷங்களையும் அடக்க வல்லது. எல்லாவற்றிற்கும் மேலாக வைத்யசப்தசிந்துவில் – अन्यः वन्यदमनः वीर्यस्तम्भनकारी बलदायी आमदोषहारीच। என புலனடக்கத்தையே தருவதனால் இதற்குத் தமனம் என்று பெயர் என்று சொல்லபட்டது. इन्द्रियाणां बाह्यवृत्तिनिरोधे। என்றும் தமனத்திற்குப் பயன் கூறப்பட்டிருக்கின்றது.

தமனம் என்பதை மருக்கொழுந்து என்றும் கூறுவர். இது இரட்டை இலைத் தாவரங்களிலே ''கம்பாசிட்டீ'' என்னும் சூர்யகாந்திக் குடும்பத்தைச் சேர்ந்த 'ஆர்ட்டிமிசியா'[1] (Artimicia pallans) என்னும் நறுமணமுள்ள சிறுசெடி. இதன் இலை பல சிறு குறுகலான பிரிவுகளாகப் பிரிந்திருக்கும். பூக்கள் மிகச் சிறியவை. மஞ்சள் நிறம். தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. இதிலிருந்து வாசனைத் திரவியங்களில் கலக்கும் எண்ணை எடுக்கிறார்கள்.

---

1 'ஆர்ட்டிமிசியா' ஜாதியிலே இருநூற்றியெண்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு. வடகோளார்த்தத்திலே இவை மிகுதியாக வளர்கின்றன. இவை உலர்வான சமவெளியிலே வளரும். சுமார் முப்பத்திநான்கு இனங்கள் வடமேற்கு இமயப்பகுதியில் இருக்கின்றன. இந்த ஜாதிச் செடிகள் எல்லாம் கசப்பான சுவை உள்ளவை. நல்ல மருந்துச் செடிகள். இதிலிருந்து 'சாண்டனின்' (Santonin) என்னும் மிகச் சிறந்த நாக்குபூச்சி மருந்து எடுக்கப்பெறுகிறது. இதில் 'ஆசினா' என்னும் செடிதான் நாக்குப்பூச்சி மருந்து தரும் முக்கிய இனம். இது துருக்கிஸ்தானத்தில் மிகுதியாக வளர்கிறது. ''ஆ ஆப்சிந்தே'' (A.Absintha) என்னும் செடியிலிருந்து ஒருவித மதுபானம் தயார் செய்கிறார்கள். இதிலிருந்து எடுக்கும் எண்ணெய் வலிமை தரும் மருந்தாகவும் செரிமான மருந்தாகவும் பயன்படுகிறது. இந்த இனம் காஷ்மீரத்தில் வளர்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவித்ரமும் தமனமும்

பவித்ர கர்மா முதலிலும் பின்னர் தமனாரோபணமும் செய்ய வேண்டும் என்று கூறப்படுவதால் முதலில் தூய்மையை - பவித்ரத்தன்மையைத் தேட வேண்டும். பின்னர் தானாகக் கிட்டும் அகப்புற அடக்கம் என்னும் தமனம். ஞானிகளுக்கு இது ஸ்வபாவ லக்ஷணம். சாதகர்களுக்கு இதுவே அப்யாஸமாகும் என்பதை நினைவுறுத்துவதாகவும் ஆகிறது.

தமனத்தைப் பற்றி கதைகள்

1. தேவர்களும், அசுரர்களும் எப்பொழுதும் ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட சிவபெருமான் கோபமுடையவராக ஆனார். பெருமானுடைய கோபத்திலிருந்து தமனர் என்ற பைரவர் தோன்றினார். இவரால் தேவர்களும், வலிமையுடைய அசுரர்களும் அடக்கப்பெற்றனர். மகிழ்ச்சி அடைந்த சிவபெருமான் பூமியில் தமனம் என்னும் பெயருடைய செடியாக ஆகுமாறும் 'எந்த மனிதர்கள் சித்திரை மாதத்தில் தமனத்தால் என்னை அர்ச்சிக்கிறார்களோ அவர்கள் மேலான பதத்தை அடையட்டும்' என்றும் 'தமன பூஜை செய்யாதவர்கள் செய்யும் சித்திரை மாதத்திய சிவபூஜையின் பயன் உன்னை அடையட்டும்' என்றும் பைரவருக்கு அருள்புரிந்தார் என்று ஸோம சம்பு பத்ததியில் (தமன பூஜாவிதி, 1-5) வருகிறது. சித்தாந்த சேகரம் என்னும் நூலிலும் இவ்வாறே வருகிறது.

2. அக்னிபுராணத்தில் (8.1-4) கதை சற்று மாறுபட்டுள்ளது:

वक्ष्ये दमनकारोह विधिपूर्ववदाचरेत्।
हरकोपात् पुरा जातो भैरवो दमिताः सुराः॥
तेनाथ शप्तो विटपो भवेति त्रिपुरारिणा।
प्रसन्नेनेरितं चेदं पूजयिष्यन्ति ये नराः॥
परिपूर्णफलं तेषां नान्यथा ते भविष्यति॥

சிவபெருமானுடைய கோபத்தினால் முன்காலத்தில் உண்டாகிய பைரவரால் தேவர்கள் அடக்கப்பெற்றனர். இவ்வாறு தேவர்களை அடக்கிய பைரவரை 'நீ தமனச் செடியாக வேண்டும்' என்று சிவபெருமான் சபித்தார். பின்னர் அவரே அருளுடையவராகி 'தமனத்தால் யார் என்னை வழிபடு கிறார்களோ அவர்களுக்குப் பரிபூர்ண பலம் கிட்டும். இத்தகைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஜையில் அடையப் பெறுவதைப் போல் மற்றவைகளில் அடையப்பெறாது' என்று கூறினார்.

3. அசிந்த்ய விஸ்வ ஸாதக்யம் என்ற ஆகமத்துள் இதே கதை வேறு மாதிரி வருகிறது :

ஈஸ்வரனுடைய கோபத்திலிருந்து தமனர் என்ற பெயருடைய பைரவர் தோன்றினார். அவரால் பலமுடையவர் களான அசுரர்களும், தானவர்களும் தோற்றுவிக்கப் பெற்றனர். இதனால் சிவபெருமான் பைரவரை பூமியில் தமனமாக ஆகும்படிச் செய்தார். 'எந்த மனிதர்கள் இந்த தமனத்தால் என்னை பூஜிக்கிறார்களோ அவர்கள் மேலான நிலையை அடைவார்கள்' என்று அருள்புரிந்தார் என வருகிறது[2].

4. குமாரதந்திரத்துள்[3] மற்றொரு கதை காணப்படுகிறது. முன்காலத்தில் பரமசிவனால் கொளுத்தப்பட்ட மன்மதன் ரதியின் அன்புக்கு சமமான குமாரனின் கடைக்கண் அருளாகிய

2. இங்கு கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. இந்த அசிந்திய விஸ்வஸாதாக்யத்தில் 70வது படலம், தமனாரோபண விதி. இப்படலத்தில் மொத்தம் 30 ச்லோகங்கள் உள்ளன. இந்த ச்லோகங்கள் எல்லாம் ஸோமசம்பு பத்ததியில் உள்ளவைகளே. இவை பாடபேதம் போல் மாற்றப்பெற்றுள்ளன. உதாரணம் :

ईशकोपात्पुराजातो भैरवो दमनाह्यकः।
सर्वेऽसुरास्तेनजातादानवाश्च महाबलाः।

என்பது இப்படலத்தின் முதல் ச்லோகம் (இதன் பொருளே மேலே கொடுக்கப்பட்டிருக்கிறது)

हरकोपात्पुरा जातो भैरवो दमनाह्वयः।
दान्तास्तेन सुरास्सर्वे दानवाश्च महाबलाः॥

என்பது ஸோமசம்பு பத்ததி. எனவே இப்பகுதி ஸோமசம்பு பத்ததி-யிலிருந்து சேர்க்கப்பட்டது என்பது உறுதி.

3 உபாகமங்களின் வரிசையில் குமாரதந்திரம், லலிதாகமத்தின் உபாகமமாகக் காணப்படுகிறது. ஆனால் அச்சான கௌசிகப் பிரச்ன, குமாரதந்திரம் (1.7-8) :

कारणाख्यं महातन्त्रं ग्रन्थकोटिप्रविस्तरम्।
ब्रह्मणे यत्पुरा प्रोक्तं त्वया सर्वविदामुदा॥
तस्मिन्तन्त्रे समाख्यातं कौमारं तन्त्रमीश्वर।

என காரணாகமத்தின் அங்கமாகக் காணப்படுகிறது. இந்நூலின் இரண்டாவது படலத்தில் சாரதா திலகத்தை குறிப்பிடுவதால் இந்நூல் 11ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்ட நூல் என்றாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீரால் அந்த இடத்தில் மீண்டும் தமனமாக உண்டானான். இதன் நறுமணத்தை முகர்ந்த சித்தர்கள், சாத்யர்கள், தேவர்கள், ரிஷிகள் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்து எப்பொழுதும் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்டு கவலையடைந்த நான்முகன் முருகனை அடைந்து வணங்கி எல்லோருடைய நிலையைக் குறித்து வேண்டினார். அதற்கு முருகன், முன்னாளில் பெருமானால் எரிக்கப்பெற்ற மன்மதன் எந்த இடத்தில் கொளுத்தப்பட்டானோ அந்த இடத்தில் இந்த தமனம் தோன்றியது. இது மன்மதன். ஆகையால் எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த தமனத்தால் பூஜை செய்தால் எல்லோரும் விரும்பிய பயனை அடையலாம் என்று கூறினார்.

5. *ஈசானசிவகுருதேவபத்ததி* 22வது படலத்தில் வேறொரு கதை வருகிறது :

சிவபெருமான் பார்வதியின் திருணமத்திற்கு முன் தனித்து தவமிருந்தார். கொடிய அசுரனால் தேவதைகள் துன்பப்பட்டனர். பிரும்மதேவனின் ஆணைப்படி பெருமானையும், தேவியையும் சேர்த்து வைக்க மன்மதனை ஏவினர். மன்மதனிடம் கோபித்து நெற்றிக் கண்ணை திறந்தார். அக்கண்ணிலிருந்து பைரவர் தோன்றி மன்மதனை எரித்து எல்லா தேவர்களையும் அடக்கினார். இதனால் மகிழ்ந்த சிவபெருமான் பைரவருக்கு தமனன் என்ற பெயரை அளித்தார். தேவிக்குப் பணிவிடை செய்ய ரதி முதலான தேவமாதர்கள் அப்பொழுது அங்கே வந்தனர். தன் கணவனான மன்மதன் எரிந்ததை அறிந்த ரதி மயக்க முற்றாள். இதனைக் கண்ட தேவி பைரவரை தமனச் செடியாகும்படிச் சபித்தாள். மன்மதனுடைய சாம்பல் சம்பந்தத்தாலும் ரதியின் கண்ணீரினால் நனைந்தும் மிகவும் மணமுடைய தமனம் உண்டாகியது. பெருமான் தேவியை சமாதானம் செய்து வஸந்த காலத்தில் தமனத்தால் பூஜை செய்தால் விரும்பிய பயனை அடையலாம். ப்ரும்மா, விஷ்ணுக்களுக்கும் தமன பூஜை செய்தால் அவர்களும் அருளுடையவர்கள் ஆவார்கள் என்று கூறினார்.

தமன விதியும் ஆகமங்களும்

முன்கூறிய ஸோமசம்புபத்ததியில் தமனோற்சவ விதியைத் தான் ஸ்வச்சந்த பைரவத்திலிருந்து எடுத்துக் கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது (தமன.5) :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स्वच्छन्दभैरवे तन्त्रे यद्यपीदमुदाहृतम्।
तथापीहसमानत्वात्सिद्धान्तेप्युपयुज्यते॥

தமன விதியானது ஸ்வச்சந்தபைரவம் என்னும் நூலில் கூறப்பட்டதாயினும் இரு தந்திரங்களும் ஸமமானவைகள் ஆனதால் இதை சித்தாந்த சாஸ்திரத்திலும் உபயோகிக்கப் படுகிறது என்பது பொருள். *ஈசான சிவகுருதேவ பத்ததியும்* (20.19) இதே கருத்தைக் கூறுகிறது :

स्वच्छन्दतन्त्रे तदपि प्रसिद्धं ततस्तु शैवैरपरैश्च दृष्टम्॥

இதைப் போலவே *கிரியாகிரம த்யோதிகையிலும்* கூறப் பட்டிருக்கிறது :

चैत्रमास पूजापुण्यफल-अलाभभयात् तन्त्रान्तरविहितमपि दमनोत्सव-विधिं .... कुर्यात्।

இதன் உரையில் स्वच्छन्द भैरवतन्त्रविहितमपीत्यर्थः என்று வருகிறது. சித்திரை மாதத்திய பூஜையின் பயன் கிட்டாமல் போகும் என்ற பயத்தினால் வேறு தந்திரத்தினால் கூறப் பட்டிருந்தாலும் பவித்ர விதியைப் போல் தமனோற்சவம் செய்ய வேண்டும் என்பது பொருள்.

தமனோற்சவம் *ஸ்வச்சந்த தந்திரத்தில்* கூறப்பட்டுள்ளது என்று வருவதால் சித்தாந்த சைவாகமங்களின் கூறப்பெறாது என்றாகிறது. மேலும் *உத்தரகாமிகம்* 17வது படலத்தில் *ஸோமசம்புபத்ததியின்* ஸ்லோகங்களே காணப்பெறுவதால் காமிகாகமப் பகுதி பிற்சேர்க்கை என்றாகிறது. *அஜிதாகமத்திலும்* இதே ஸ்லோகங்கள் காணப்பெறுகின்றன.

மாத பூஜைகளும் ஆகமங்களும்

இன்று கிடைக்கும் ஆகமங்களுள் பழமையான *கிரணம், ஸுப்ரபேதம், நிச்வாஸ காரிகை* போன்ற ஆகமங்களுள் மாத பூஜைகள் காணப்பெறவில்லை. ஆகமங்களுள் ஒரே மாதிரி பூஜை முறைகள் கூறப்பெறவில்லை. புராணங்களுள் பவித்ரம், தமனம் இரண்டைத் தவிர மற்ற பூஜைகள் விளக்கப் பெறவில்லை. *ஸோமசம்பு, அகோரசிவம்,* சிவாக்ரயோகியின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிரியாதீபிகை போன்ற பத்ததிகள் பவித்ரம், தமனம் இவைகளைத் தவிர மற்ற மாத பூஜைகளைக் கூறவில்லை. காலக்கிரமத்தில் இவைகளைச் சைவாகமங்கள் ஏற்று கொண்டன என்றுதான் கூறவேண்டியுள்ளது.

ஆகம காரியங்கள் எல்லாவற்றுள்ளும் ஒருமைப்பாடு உண்டு: பௌதிகமான ப்ராகிருத பாவத்தை நீக்கி உபாஸ்ய தேவதை, உபாஸகன், பூஜைக்குரிய பொருள்கள் எல்லாவற்றையும் சிவமாகப் பாவிக்கப் பழக்குவது என்பதாகும். ஆகமங்களின் வித்யா பாதங்கள் பதி வேறு, பசு வேறு என்று த்வைதத்தைப் போதித்தாலும் கிரியா பாதம்: ''சர்வம் சிவமயம்'' என்றும் ''சிவோஹமிதிபாவயேத்'' ''சிவோபூத்வா சிவம் யஜேத்'' என்றும்

शिवोदाता शिवो भोक्ता शिवः सर्वमिदं जगत्।
शिवो यजति सर्वत्र यः शिवः सोऽहमेवतु॥

என்றும் அபேதத்தயே (அத்வைதத்தையே) கூறுகின்றன.

கால விதி

மாஸபூஜைக்கு ஸ்தூலம் என்றும் சூக்ஷ்மம் என்றும் காலம் இரண்டு வகை. ஸ்தூலமான காலங்களிலேயே மாஸ பூஜைகளைச் செய்ய வேண்டும் என்று *அம்சுமதாகமம்* (8.6-8) கூறுகிறது :

मासद्विविधमाख्यातं स्थूलसूक्ष्मं दिवाकर।
मार्गशीर्षादि कार्तिकान्तं स्थूलमित्यभिधीयते॥
मेषादि मीनपर्यन्तं सूक्ष्ममेवं प्रकीर्तितम्।
सर्वं स्थूलेन कर्तव्यं .... ॥

முன்பு *காரணாகம* வசனப்படி ஒரு மாதத்தில் இரண்டு நட்சத்திரங்கள் வந்தால் இரண்டாவதில் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் *அம்சுமதாகமத்தில்* (8.11) :

एकमासे द्विनक्षत्रे द्वयोरपि च कारयेत्।

ஒரு மாதத்தில் இரு நட்சத்திரங்கள் வந்தால் இரண்டிலும் பூஜை செய்ய வேண்டும் என்று வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகசாலை

பவித்ரம், ப்ரதிஷ்டை இவைகளைப் போன்றே யாகசாலை அமைக்க வேண்டும் (*அம்சுமதாகமம், 8.12*) :

प्रासादस्यैशदिग्भागे पूर्वे वा चोत्तरेपि वा।

ஆலயத்தின் ஈசான பாகத்திலோ, கிழக்கிலோ, வடக்கிலோ, யாகசாலையின் ஸ்தானமாகும் (*அம்சு.*, 8.13-4) :

दशपञ्चकरं वाथ त्रयोदशकरायतम्।
मण्डपं कारयेत्तत्र षोडशस्तम्भसंयुतम्॥

பதினைந்து கரமோ, பதின்மூன்று கரமோ அகல நீளமுடைய தாகவும் பதினாறு ஸ்தம்பங்களை உடையதாகவும் யாகசாலை இருக்க வேண்டும். ஒரு கரம் என்பது 24 அங்குலங்கள் ஆகும் (*அம்சு.*, 22.24) :

भानुद्वयाङ्गुलं मानं हस्तमित्युच्यते बुधैः।

இவ்விஷயத்திலும் ஆகமங்களுள் கருத்து வேறுபாடு காணப் படுகிறது.

ஒன்பது, எட்டு, ஏழு, ஐந்து கரங்களை உடையவை யாகவும் சதுரமாகவும் முன்போலவே யாகசாலையைக் கல்பிக்க வேண்டும் (*உத்தர காரணம், 35.2*) :

पूर्ववद्यागशालां च नवाष्टमुनिहस्तयोः।
पञ्चहस्तप्रमाणं वा मण्डपं चतुरश्रकम्॥

இது விரிப்பிற்பெருகும்.

மண்டலம்

ஸூக்ஷ்மாகமத்தில் ஸ்வஸ்திக மண்டலம் என்றும் உத்தர காரணாகமத்தில் பத்ர மண்டலம் என்றும் ஸ்வாயம்புவாகமத்தில் ஸ்ரீகாந்தி திலகம் என்றும் மண்டலத்தின் பெயர்கள் கூறப்படுகின்றன. ஸோமசம்புபத்ததி, அகோரசிவாசார்ய பத்ததி ஆகிய இவைகளிலும் அக்னி புராணத்திலும் மண்டலம் காணப்படவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குண்டம்

சப்தாச்ர குண்டம் அமைக்க வேண்டும் என்று ஸ்வாயம்புவாகமத்திலும், சடச்ர குண்டம் என்று உத்தரகாரணத்திலும் சதுரச்ரமோ, வட்டமோ, என்று பூர்வகாரணத்திலும் கூறப்படுகிறது. இரு பத்ததிகளிலும் குண்டத்திற்கு இலக்கணம் காணப்படவில்லை.

தமனத்தைக் கொண்டு வருதல்

ஸப்தமி அல்லது திரயோதசியில் தமனச்செடி இருக்கும் இடத்திற்குச் சென்று அஸ்திர மந்திரத்தால் சுத்தி செய்து ஸம்ஹிதா மந்திரத்தால் பூஜிக்க வேண்டும். பிறகு,

हरप्रसादसम्भूत त्वमत्र सन्निधीभव।
शिवकार्यं समुद्दिश्य नेतव्योऽसि शिवाज्ञया॥

என்கிற மந்திரத்தைச் சொல்லி தமனச் செடியை எடுத்துச் செல்ல வேண்டும். செல்லுமிடம் வெகு தொலைவானால் மண்ணுடன் ஒரு பாத்திரத்தில் வைத்து நீரிட்டு எடுத்துச் செல்ல வேண்டும். உத்தரகாரணம், ஸ்வாயம்புவம் இவைகளில் தமனத்தை எடுத்து வரும் முறை காணப்படவில்லை.

யாகசாலார்ச்சனம்

மாலையில் நித்திய பூஜை முடிந்த பிறகு நைமித்திக காரியங்களைச் செய்ய வேண்டும் (*சிந்த்யம், 13.4*) :

नित्यपूजावसाने तु नैमित्रिकमथाचरेत्।

யாக சாலையில் மண்டப சுத்திக்காக பஞ்சகவ்ய கல்பனம், ஸூர்ய பூஜை முதலாக துவார பூஜை, வேதிகார்ச்சனம், ப்ரதான கும்ப பூஜை, பூஜாங்க அக்னி கார்யம் இவைகளைச் செய்ய வேண்டும்.

உத்தரகாரணத்தில் (35.5) யாக சாலையின் ஈசான மூலையில் வேதிகையில் பத்து கும்பங்களை வைக்க வேண்டும் என்று வருகிறது.

ऐशान्ये वेदिकामध्ये दशकुम्भान् न्यसेत्ततः।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வாயம்புவாகமத்தில் யாகசாலையின் நடுவில் வேதிகையில் கும்பங்களை வைக்க வேண்டும் என்று வருகிறது. ஸோமசம்பு பத்ததியில் குறிப்பு ஒன்றும் இல்லையாயினும் அதன் வியாக்யானத்தில்,

शङ्करशब्देन कुम्भस्थशिवः, मण्डलस्थशिवः स्वेष्टलिङ्गस्थ शिवश्च विवक्षितः।

என்று வருவதால் யாக சாலையின் நடுவில் கும்பம், மண்டலம் இருப்பதாக கொள்ள வேண்டியுள்ளது.

யாகசாலையின் நடுவில் உள்ள மண்டலத்திற்கு மேற்கில் தமனச் செடியின் வேரையும் இதன் அடி மண்ணையும் சத்யோஜாத மந்திரத்தாலோ, ஹ்ருதய மந்திரத்தாலோ வைக்க வேண்டும். வடக்கில் செடியின் தண்டு நெல்லிக்காய் இவைகளை வாமதேவம், அல்லது சிரோ மந்திரத்தால் வைக்க வேண்டும். தெற்கில் தமனத்தின் இலை, விபூதி, இவைகளை அகோர மந்திரத்தாலோ, சிகா மந்திரத்தாலோ வைக்க வேண்டும். கிழக்கில் தமனத்தின் பூவுடன் தந்தகாஷ்டத்தை தத்புருஷ மந்திரத்தாலோ, கவச மந்திரத்தாலோ சமர்ப்பிக்கலாம். ஈசானத்தில் தமனத்தின் பழத்தையும், சந்தனத்தையும் மூலமந்திரத்தாலோ சிவகாயத்ரியாலோ வைக்கலாம்.

பிறகு கையில் முன் கூறிய தமனத்தின் பஞ்சாங்கங்களையும் மற்றும் புஷ்பம், அக்ஷதம், இவைகளையும் எடுத்துக் கொண்டு

आमन्त्रितोसि देवेश प्रातः काले मया प्रभो।
कर्तव्यं तु यथा लाभं पूर्णं पर्व तवाज्ञया॥

என்று விண்ணப்பித்து புஷ்பாஞ்சலி செய்து ஜப சமர்ப்பணம் முதலியன செய்ய வேண்டும். மீதியுள்ள தமனங்களை ஒரு பாத்திரத்தில் வைத்து மூடி கவச மந்திரத்தால் அவகுண்டனம் செய்து ரக்ஷித்து ப்ரதான கும்பத்தின் அருகில் வைக்க வேண்டும்.

ஆசாரியன் அன்று இரவு ஹவிஸை உண்டோ உபவாச மாகவோ இருக்க வேண்டும். சுவாமியின் சந்நிதியிலேயே தியானம், ஜபம், நாமஸங்கீர்த்தனம் இவைகளுடன் இரவு கண் விழிக்க வேண்டும். மறுநாட்காலையில் ஸ்நானம், சந்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவைகளை முடித்துக் கொண்டு யாக சாலையில் ப்ரதான கும்பத்திற்கு அஷ்ட புஷ்பம் சமர்ப்பித்து கும்பத்தை விஸர்ஜனம் செய்ய வேண்டும். பிறகு இஷ்ட லிங்கத்தில் நித்ய பூஜை செய்து முழு தமனத்தால் பூஜிக்க வேண்டும் கடைசியில் அருகு, சந்தனம், அக்ஷதை இவற்றுடன் தமனத்தையும் கையில் எடுத்துக் கொண்டு ஈசுவரனைத் தியானித்து,

ओं हां आत्मतत्त्वेश्वराय शिवाय नमः।

ओं हां विद्यातत्त्वेश्वराय शिवाय नमः।

ओं हां शिवतत्त्वेश्वराय शिवाय नमः।

ओं हां सर्वतत्त्वेश्वराय शिवाय नमः।

என்று அர்ச்சிக்க வேண்டும்.

ओं हां मखेश्वराय मखं पूरय पूरय शूलपाणये नमः।

என்று பிரார்த்தித்துக் கொண்டு ஹோமத்தை முடித்து ஈச்வரனிடம் பின்வருமாறு பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

भगवन्नतिरिक्तं वा हीनं वा यन्मयाकृतम्।
सर्वं तदस्तु सम्पूर्णं पर्वदामनकं मम॥

பிறகு ஆசார்யனையும், அந்தணர்களையும், அடியார் களையும், உணவு தக்ஷிண இவைகளால் உபசரிப்பது விரதத்தின் அங்கமாகும். இவ்வாறே கிரியாகிரமத்யோதிகையிலும் காணப் படுகிறது.

ஆத்மார்த்தமாக[4] இருந்தால் ஒரு நாளில் முடிக்க வேண்டும். அதாவது முதல் நாள் மாலையில் இருந்து மறுநாள்

---

4 ஆத்மார்த்த பூஜா பத்தறி என்னும் நூல் நிகமஞான தேசிகர் என்பவரால் எழுதப்பட்டது. இவரது காலம் கி.பி. பதினாறாவது நூற்றாண்டு. இவர் சிதம்பரத்தில் குகை மடத்தில் இருந்தவர். இவர் காமிகத்தின் தமனாரோபண ச்லோகங்களை "காமிகே" என்று எடுத்துக் காட்டுவதால் இவரது காலத்துக்கு முன்பே காமிகத்தில் தமனாரோபணம் ஏற்றப்பட்டுவிட்டது என்று தெரிகிறது. இந்த பத்ததி ஸோம சம்பு பத்ததியைத் தழுவியது. ஸோமசம்புவில் ஆத்மார்த்தம், பரார்த்தம் என்ற பிரிவுகள் கிடையாது. இவர் பிரித்துக் காட்டுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலையில் முடித்துவிட வேண்டும். आत्मार्थेत्वेकरात्रन्तु என்று ஆத்மார்த்த பூஜா பத்ததியில் வருகிறது. பூஜை முடிவில் நிர்மால்ய தமனத்தைச் சண்டேசருக்குச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

பரார்த்தாலயத்தில் பல சந்திகள் சாத்தலாம். தமனத்திற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. எவ்வளவு நாட்கள் தமனோற்சவம் நடக்கிறதோ அவ்வளவு நாட்களும் யாகசாலையில் அக்னியைக் காக்க வேண்டும்.

यावद्दिनं विसृज्याथ तावद्दिनं च रक्षयेत्।

முடிவு நாளில் பூர்ணாஹுதி செய்து பூர்த்தி செய்ய வேண்டும். சகல மூர்த்திகள், சுதை உருவங்கள், சித்திரங்கள் ஆகிய எல்லோருக்கும் செய்யலாம். பித்தி சித்திரத்திற்குக் கண்ணாடியில் செய்ய வேண்டும். முடிவில் கண்ணாடியை சித்திரத்தின் எதிரில் காட்ட வேண்டும்.

क्रिया परिसमाप्तौ तु दर्पणं दर्शयेच्छिवे।

ஸ்வாயம்புவாகமத்தில் (26.27) பாத்யத்திரவியம் - சித்தார்த்தம்; ஆசமனத் திரவியம் - திருணம்; அர்க்யத் திரவியம் - யவை; ஸ்நானத் திரவியம் - கந்தோதகம்; வஸ்திரம் - சிவப்பு; கந்தம் - புனுகு; ஆபரணம் - கோமேதகம்; புஷ்பம் - ப்ருகதி; தூபம் - குங்கிலியம்; தீப சங்க்யை - 170; நைவேத்யம் - திலான்னம், பழங்கள் - பலா முதலியன; சந்தனம் - செஞ்சந்தனம்; சமித்து - ஆல்; ஆகுதி எண்ணிக்கை - 70; பானீயம் - ஸ்வர்ணோதகம்; முகவாஸம் - கற்பூரம்; பண் - கொல்லி; ந்ருத்தம் - புஜங்கலலிதம்; தாளம் - லக்ஷ்மீவர்ணம்; ராகம் - ஆகிரி; வாத்யம் - படகம்; பத்ரம் - தும்பை இலை. தமனத்தை மொத்தமாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது:

तन्मन्त्रं तु स्वनुस्मृत्य द्रव्यलिङ्ग च योजयेत्।

உத்தரகாரணத்தில் (35.19) பாத்யத்திற்குத் திரவியம் காணப்படவில்லை. ஆசமனம் - த்ருணம்; அர்க்கியம் - குங்குமம்; அபிஷேகஜலம் - மாதவ்யோதகம் (மாதவி என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவிட்ட நீர்); வஸ்திரம் - சித்ரவர்ணம்; புஷ்பம் - மகிழம்பூ; சந்தனம் - பஸ்மம்கலந்த சந்தனம்; ஆபரணம் - பத்மராகமணி; நைவேத்யம் - ஹரித்ரான்னம்; உபகாரம் - கண்டங்கத்திரி; பானீயம் - நதியின் நடுவில் ஊற்றிலிருந்து எடுத்த நீர்; இதில் உசீரம், ஹ்ரீபேரம், சந்தனம் இவைகளைச் சேர்க்க வேண்டும். தூபம் - மனத்திற்குப் பிடித்த வாசனைப் பொருள்; தீப சங்க்யை - 200; முகவாஸம் - கஸ்தூரி; பண் - சீகாமரம்; ராகம் - தேசிகம்; தாளம் - சண்டபின்னம்; நிருத்தம் - ஆரூடம்; வாத்யம் - மிருதங்கம்; தமனத்தை மொத்தமாக சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது :

शम्भोश्च दापयेत्पश्चात् नैवेद्यं धूपदीपकम्।

இவ்விதம் மாத பூஜை கூறுவதிலும் ஆகமங்களுள் ஒற்றுமை காணப்படவில்லை.

ஆகமங்கள் இரு பிரிவாக உள்ளன. காமிகம், அசிந்த்யம், குமாரதந்திரம் போன்றவை ஸோமசம்பு பத்ததியைப் பின்பற்றியவை. உத்தரகாரணம், ஸ்வாயம்புவம், இவை வேறு வகை. இரண்டாவதில் தமிழ்ப்பண்கள், சங்கீத ராகம், தாளம், வாத்யம், நிருத்தம் போன்றவைகளும் கூறப்படுகின்றன. இது புராணங்களிலோ பத்ததிகளிலோ காணமுடியாதவை. எனவே ஸோமசம்பு பத்ததிக்குப் பிற்காலத்தில் கோயில் வழிபாடுகள் விரிவாக ஆன காலத்தில் ஏற்பட்டவை என்பதைக் காட்டுகிறது. பதினாறாம் நூற்றாண்டில் இருந்த சிவாக்ரயோகி எழுதிய கிரியா தீபிகையில் தமனாரோபணம் கூறப்படவில்லை.

குமாரதந்திரத்தில் முருகனுக்கும், பாஞ்சராத்ரம், விஸ்வாமித்ர சம்ஹிதையில் மகாவிஷ்ணுவிற்கும், பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த உமாநந்த நாதரால் எழுதப்பெற்ற நித்யோத்ஸவ பத்ததியில் திருபுரசுந்தரிக்கும், ராமார்ச்சன சந்திரிகையில் ராமனுக்கும், ஹரிபக்தி விலாஸம் என்ற நூலில் கிருஷ்ணனுக்கும் தமனாரோபணம் கூறப்பட்டிருக்கிறது.

தமனாரோபனத்தின் தத்துவம்

தமனாரோபணகிரியைகள் ஆகமங்களால் பிற் காலத்திலேயே ஏற்றுக் கொண்டவையானாலும் ஓர் உயர்ந்த தத்துவத்தை நமக்குக் காட்டுகின்றன. பக்தி சாஸ்திரமே இதனுள் அடங்கி இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமனாரோபணத்தின் இன்றியமையாமையை அமிர்தாநந்த நாதர், தமது சித்விலாஸத்தில் (33) கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

वेद्यमेवराशिदमनेन विश्वतो निर्विकल्पमयवासनोल्बणम्।
चित्रमेवदमनं शिवेऽमुकस्यार्पणं दमनकार्पणं परम्॥

உலக ஆசையை அடக்கி நிர்விகல்ப வாஸனையை உடைய மனமே தமனம். இம்மனத்தைச் சிவனடியில் சமர்ப்பிப்பதே தமனாரோபணம். இதுவே எல்லா புஷ்பார்ச்சனைகளுக்கும் பொருள்.

LATĀCITRAMAṆḌLAM
(SIDDĀNTASĀRĀVALI, KRIYĀPĀDA, 51)



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

DAMANĀROPAṆA YĀGAŚALĀ



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

DAMANĀROPAṆAM

R. SUBRAMANIAN

(Synopsis)

Nityārcana

Even as an individual (man) has the necessity to have bath, food and sleep to keep himself fit, so too in the temples of the Supreme deities, it is essential to have the daily routine of worship called *nityārcana* which cannot be left off on any account. The efficacy of this routine in temple is given in the *Kāraṇāgama* I.30.1

The worship in 12 months

In all the twelve months, worship is offered on the days of the asterisms of (stars) Citra, Viśākhā, Mūla, Uttarāṣāḍhā, Śravaṇa, Pūrvābhādrapada Aśvinī, Kṛttikā, Ārdra, Puṣya, Maghā and Uttaraphalgunī - either with the conjuction of Paurṇami (full moon) or otherwise. There are the reckoned days of worship in the 12 months or worship can be done on the day of Thiruvādirai or birth star of the *yajamāna* (agent) in all these twelve months.

According to *Amśumatāgama* these *pūjās* bestow fame, longevity of life, freedom from illness (good health), progeny, wealth, liberation by crossing over the ocean of life and getting desired objects.

Damanotsava

The *pūjā* done in the month of Cittirai (*caitra-meṣa*) is *damanāropaṇa*. It is traditionally named *damanotsava*.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Damanotsava should be performed only after *pavitrotsava.*

Damana means controlling. Lord Śiva is named '*damana*' (controller) in the *Mahābhārata* and the Vedas

The Nature or quality of Damana

The feature of *damana* is very important and of special significance. It is capable of curing very severe diseases like *kuṣhṭha* and the defects caused by *vāta* (air), *piṭta* (bile) and *sleṣma* (phlegm). Since it gives the self-control and fortification of the sense organs, it is called *damana.*

Damana means the fragrant-flowering plant *Solanum Jacquine* (*Marukkoḻundu* in Tamil). It is a two leaf plant, belonging to the composite of the sunflower variety named *Artimicie pallans*, a creeper having good fragrance. These are about 34 species in the North Western Himalayas. These plants have bitter taste. They are precious herbs. From this the medicine *santonin* (cure of tape worms) is prepared. Of these *acina* is the important plant for the medicine.

Pavitra and Damana

Since *pavitra karma* precedes *damanāropaṇa,* we should first seek purity. Then naturally follows the external self control, called *damanam.* Jñānis have this by nature; for *sadhakas* (who strive to achieve) it is an *abhyāsa* (exercise). To bring *damana* one should go to the place of *damana plant* either on a *saptami* or *trayodaśī* and worship it with *samhitāmantra* after cleansing (purifying) with *astramantra.* Then the *damana* plant

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

should be taken with *mantras* to the place of destination.

For the sanctity of the *maṇṭapa* at the Yāgaśālā, *pañcagavya kalpanā, sūryapūja* leading to *dvārapūjā, vedikārcanam, pradhāna kumbha pūjā* and *purvāṅga agni* should be performed. In the *Uttarakāraṇa* it is said that ten *kumbha* (pitchers) should be placed the *vedi* (altar) at the Īśāna corner (North East) of the Yāgaśālā.

In the *Svāyambhuva Āgama* it is said that *kumbhas* should be placed on the altar at the centre of the Yāgaśālā. There is no reference to this in the *Somaśambhupaddhati.* In its commentary it is said that the *kumbha* and *maṇḍala* are at the centre of the Yāgaśālā. To the west of the *maṇḍala,* at the centre of the Yāgaśālā, the *damana* plant's root should be planted with the attached soil (mud) with the chanting of either *sadyojāta mantra* or *hṛdaya mantra.* To the north, the stem of the plant and *āmalaka* fruit (*Nellikkai*) should be placed with the *vāmadeva mantra* or *śiva mantra.* In the south the leaf of *damana* and sacred ash (*vibhūti*) should be placed with *aghora mantra* or *śikhā mantra.* In the East the flower of *damana* and *dantakāṣṭha* (the tooth brushing twig) should be placed with *tatpuruṣa mantra* or *kavaca mantra.* In the north east the fruit of *damana* and *sandal* should be placed with the *mūla mantra* or *śivagāyatrī.*

If it is for *ātmārtha* (for one's own sake) the *vrata* should be finished in one day, starting with the first day evening and ending with the next day morning. In the *Atmārthapūjāpaddhati* it is said that at the end of the *pūjā,* the *nirmālya damana* should be offered to Caṇḍeśvara.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In the *parārtha ālaya* (temple for public worship) many *sandhis* could be puṭ on. *Damana* has no *nirmālya doṣa.* The *agni* (fire) in the Yāgaśālā should be kept for all the days of *damanotsava* throughout.

On the final concluding day the vow should be wound up with Pūrṇāhuti

The *Ātmārthapūjāpaddhati* was written by Nigama Jñānadeśika. His date is 16th C. A.D. He was in the Guha mutt at Chidambaram. Since he quotes *damanāropaṇa slokas* with the word '*kamika*', it should be construed that *damanropaṇa* had been taken in the *Kamika* even before his date. This *paddhati* follows *Somaśambhupaddhati.* In *Somaśambhu* (*paddhati*) there is no division as *ātmārtha* and *parārtha.* But Desika makes such a division.

Damanāropaṇa has been prescribed in *Kumāratantra* for Muruga, in *Pāñcarātra* and *Viśvāmitra Samhitā* for Mahāviṣṇu, in the *Nityotsava paddhati* of Umānanda Nātha of 18th century for Tripura Sundarī, in the *Rāmārcana Candrikā* for Rāmā and in *Haribhakta vilāsa* for Kṛṣṇa.

The significance of Damanotsavam

Even though the ritual of *damanāropaṇa* was accepted by the Āgamas, only in the later days it shows a highly valued significance. The entire *bhakti śāstra* is enshrined in it.

Damana induces the mind that has developed *nirvikalpa vāsanā* after completely subduing the *lokavāsanā* (attachment to wordly affairs). To dedicate this to the lotus feet of Śiva is *damanropaṇam.* This is the significant meaning of all *puṣpārcanās* (flower offerings).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

MUDRĀS

S.S. JANAKI

Gesture language is as old as man. Its provenance is almost unlimited. It could be related to all sorts of things and activities in ordinary parlance - gross, subtle, simple and complex; it may also be connected with religious, spiritual and mystic matters. When used in art and religion, gestures are naturally stylised. In the Hindu tradition they are defined and codified along with their uses for distinct purposes (*viniyogas*) in special treatises. Sanskrit words like *saṅketa, iṅgita, aṅga-vikṣepa, sūcana, abhinaya* and *mudrā* are synonyms conveying different levels of meaning. Although *abhinaya* and *mudrā* are quite well-known in the fields of art and religion, the deeper meanings of these terms need to be made clear. Here we will concern ourselves with the nature of *mudrā* in religion, especially Śaivism.

The Term 'Mudrā'

The word *mudrā* is of frequent occurrence in Sanskrit literature and bears several meanings like seal, imprint, passport, badge, mystery, code language and hand-posture. The word does not occur in the early lexicons like those of Amara and Hemacandra. Medieval rhetoricians recognise a figure of speech (*alaṁkāra*) called Mudrā referring to the expression of things by significant names that deliver a second dimensional meaning. Pāṇini does not mention *mudrā* in his *Aṣṭādhyāyī* but in his

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Uṇādi Sūtra II. 3., he derives the word from the root '*mud*' 'to be happy' with the addition of the termination '*ra*' (*mud-rā*). The fact that the grammarians like Pāṇini and Hemacandra explain *mudrā* by Uṇādi, also suggests that it is not a regular expression, and '*mud*' may or may not be its original root. Bharata's *Nāṭyaśāstra* talks of the *abhinayas* of the *aṅgas* and *upāṅgas*, but does not mention the word '*mudrā*' in any context. But in the present times '*mudrā*' is used freely.

In the Saivite and Śākta texts the etymology of the term is explained in varied fanciful ways, according to the distinct meanings assigned to the two component syllables of the word. Accordingly the following are some of the connotations of '*mudrā*' :

1. It gives (*ra* 'to give') pleasure (*mudam*). Cf. *Kāraṇa* : *mudam karoti devānām* (*mudrā* delights the gods.)
2. It gives pleasure to gods and also melts their heart with pity (*drāvayati*, causal of '*dru*' to melt); or it delights the gods and drives out (*drāvayati* from '*dru*' 'to run') demons. Cf. *Kāraṇa:* मोदनात् द्रावणाच्छैव मुद्रेयं परिकीर्तिता।
3. It dissolves or destroys the bonds (*mudam drāvayati*, '*muḥ*' here meaning 'bondage')
4. It releases (*mocayati*) the performer from adverse effects and also dissolves bondage. Cf. *Kāma kalāvilāsa*:

   मोचयन्ति ग्रहादिभ्यः पाशौघान् द्रावयन्ति च।
   मोचनं द्रावणं यस्मात् मुद्रास्ताः परिकीर्तिताः॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. It is the very potentiality of Śiva with powers to stamp or seal all obstacles (*Mṛgendra Āgama*) :
विघ्नौघमुद्रणान्मुद्राः कथ्यन्ते हरशक्तयः।

In fact all the above meanings give a broad picture of the different types of *mudrā* or ritual hand-postures as prevalent in Saivite rituals. This is a vast area and infact all the Śaiva Āgamas and their recastes called Paddhatis deal with this subject. We may now see some categories of *mudrās.*

Saccidānanda aspects in Śiva-forms

Before going to the specific *mudrās* it is to be noted that three distinct forms of Śiva represent the triune aspects of the Supreme Being as constituting pure Existence, Consciousness and Bliss (*sat, cit* and *ānanda*). These three distinct forms are the Bhikṣāṭana (the lord going about for alms) or the related Kaṅkālamūrti, Dakṣiṇāmūrti (the Lord facing the South or the lord of wisdom) and Naṭarāja (the Lord of dancers). These gods are said to represent the aspects of *sat, cit* and *ānanda* respectively, especially from their hand-poses, and their symbolism.

In the Bhikṣāṭana-Kaṅkāla forms the Lord has four hands, three of them carrying *triśūla, ḍamaru* and *kapāla.* The loosely suspended right hand is holding the *dūrvā* grass shoots in the *Mṛgīmudrā*, and offering it to the deer standing nearby and looking up at the Lord.

Mṛgīmudrā is defined as :
मध्यमानामिके चैव अङ्गुष्ठाग्रे नियोजयेत्।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Here the middle and ring fingers are fixed on to the thumb, resulting in the lifting of the pointed and little fingers. This hand-pose itself looks like the face of a deer, and is hence rightly called the *Mṛgīmudrā.*

In this pose the bent middle and ring fingers are said to represent the *puṇya* and *pāpa,* the thumb, of Lord Īśvara and the *dūrvā* grass held between the three fingers, the fruit of actions. The Purāṇas explain that the Lord took up the Bhikṣāṭana form to instruct the sages in the Dāruka forest, that he alone and not the rituals performed by them intently, would release them from the worldly sufferings. In the Bhikṣāṭanamūrti, the *Mṛgīmudrā* and the uplifted face of the real deer, together indicate the *sat-tattva* of the Lord; hence it is also called *tattva* or *śivasattābhivyañjaka-sanmudrā.*

The form of Dakṣiṇāmūrti, facing south, and imparting Supreme knowledge is well-known. The right hand that represents the way in which the divine teacher taught in silence to his spiritual students, the way to obtain final release is called variously as *Jñāna* or *Vyākhyāna* or *Cinmudrā.* In the Saivite tradition it is called *śivajīva-tādātmya, śuddha-advaita-abhivyañjaka-cinmudrā,* the hand-pose that explains clearly the non-difference between the Supreme Śiva and the individual soul. This unity is symbolised in the joining of the thumb (that represents the self-luminous Śiva) and the human soul (the pointed finger). When this happens the other three fingers get separated naturally. This natural disposition is explained as the human being getting rid of three *pāśas,* namely, *mala, māyā* and *karma* represented

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

respectively by the little, ring and middle fingers.

Thus the Śiva form of Dakṣiṇāmūrti stands for the *cit*-aspect of the Supreme Being.

Having noted the two above forms of *sat* and *cit* aspects as revealed through their *mudrās*, we may go to the hand poses used by devotees on various occasions like worship, *japa*, meditation and special rituals (*Pūjāprakāśa*):

अर्चनाजपकाले च ध्याने काम्ये च कर्मणि।
तत्तन्मुद्राः प्रयोक्तव्याः देवतासन्निधापकाः ।।

In fact, it is emphatically stated that when *mudrās* are not performed the rituals bear no fruit (*Kālikāpurāṇa*, 66.35):

मुद्रां विना तु यज्जप्यं प्राणायामः सुरार्चनम्।
योगध्यानासनं चापि नो फलानि तु भैरव।।

Symbolism of Hands and Fingers

How do the *mudrās* become so important and potential in worship and other rituals ? In this connection the texts emphasise that in the Saivite context the hands are not to be considered as mere limbs in the physical body. They are to be imagined as the Sun and the Moon, or Śiva and Śakti (*Śivārcanacandrikā* of Appayya, p.6):

वामदक्षिणहस्तौ सोमसूर्यात्मकौ शक्तिशिवौ वा विचिन्त्य............ ।

Similarly the five fingers from the little finger to the thumb are said to be associated respectively with the five elements — earth, water, fire, air and ethereal space. (*pṛthvī*, *ap*, *tejas*, *vāyu* and *ākāśa*). Rāghava Bhaṭṭa in his commentary on *Śāradātilaka* (XXIII. 108) makes a clear statement about this :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स्वाङ्गुल्यो हि पञ्चभूतात्मिका अङ्गुष्ठाद्याः आकाश-वायु-अग्नि-सलिल-भूरूपाः तासां मिथः संयोगरूपसङ्केतान् कोऽपि देवतप्रगुणो भावपूर्वको मोदः सान्निध्यकरो भवति। तदुक्तम्–

पृथिव्यादीनि भूतानि कनिष्ठाद्याः क्रमान्मताः।
तेषामन्योन्यसम्भेदप्रकारैः तत्प्रपञ्चता॥

Thus the performance of the *mudrās* with hands and fingers associated with the five elements actually create esoteric joy in the devotee.

The fingers, specially the thumb and the ring fingers, are also associated respectively with Lord Īśāna and *amṛta* or *soma kalā*.

However, all texts are agreed in associating the thumb with Lord Śiva. While explaining the forms of Bhikṣāṭana and Dakṣiṇāmūrti, it was seen earlier that *aṅguṣṭha* signifies the Lord in the *Mṛgī* and *Cin mudrās*.

The above symbolism of the hands and fingers is not purely textual and traditional. The placement (*nyāsa*) or recitation of specific *mantras* on them while performing the *mudrās* reiterate this fact.

Now some specific *mudrās* are considered.

Few *mudrās* that indicate an object, action, or some quantity structurally

1. *Pañcamukhī* : This *mudrā*, indicative of an object, is defined as:

कृत्वान्योन्यगताङ्गुल्योः पृष्ठतो हस्तयोर्द्वयोः।
तिर्यक्स्थौ कन्यसौ कृत्वा ह्यङ्गुष्ठाभ्यां समाक्रमेत्॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

देशिनी-मध्यमै रुद्धानामिके सोच्छ्रिताङ्गुले।
कृत्वा पञ्चमुखी ख्याता मुद्रेयं शङ्करस्य तु॥

In this *mudrā* the hands with upturned palms are interlocked; the thumb of one hand presses at its tip the little finger of the other; so also the bent pointed finger touches the tip of the middle finger, so that the tips of each of these pairs occupy the four directions. The two ring fingers are brought together for standing erect in the middle. The *Pañcamukhī mudrā* is to be used to denote the composite form of Sadāśiva with five faces.

2. For denoting the quantities of things (*dravya*) required for worship and other rituals there are the following *mudrās* :

a) Grains like rice and *yava* are to be offered as could be contained within the five fingers joined together - पञ्चशाखाश्रितं व्रीहियवम्। This is called *Sūkarī Mudrā* as the hand-pose resembles a pig's face.

b) Offering of sesamum, mustard and other similar things is as could be held between the bent thumb, middle and ring fingers in *Mṛgī mudrā* (*mṛgayā tilādikam*)

3. *Mudrās* denoting action :

a) *Śikhara hasta* used for ringing the bell.

b) *Aṅkuśa* or *Sṛṇi* : In this *mudrā*, the tip of the finger in the first-position is curved; since the hand-pose resembles a hook it is appropriately called *Sṛṇi* or *Aṅkuśa*.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Like a hook the *mudrā* is used to catch or drag some object. In this connection the Sanskrit verbal forms '*utkṛṣya*', '*ākṛṣya*' are appropriately used.

This is used in many daily (*nitya*) and occasional (*naimittika*) rites. Three such instances are given below:

(i) In the daily routine of a Saivite, after his bath and before the performance of morning or evening ablution (*sandhyāvandana*) he is instructed to symbolically draw the nectar from the *bindusthāna* (forehead section between the eyebrows) with the *Aṅkuśa mudrā* while reciting the *hṛdaya-mantra* : *om hām hṛdayāya vauṣaṭ*. This *amṛta* is mixed with the water for *sandhyāvandana* so that it is converted in to Śivatīrtha.

(ii) In Viśeṣa Dīkṣā it is used for enkindling the student's soul by the *samskāra* of offering it symbolically in the sanctified fire into the womb of Vāgīśvarī. In this context the teacher draws out the student-initiate's soul by *Aṅkuśa mudrā* along with the recitation of the *mantra* — *om hām ham hām ātmane namaḥ*.

(iii) In Nirvāṇa Dīkṣā for tying the student's Soul with the rope symbolistic of the binding noose (*pāśa*), the teacher draws out the student's *ātman* with *Aṅkuśa mudrā* along with the recitation of *om hām ham hām svāhā* and takes it to the student's Dvādaśānta level.

c) *Nārāca* : In *Nārāca mudrā* flowers kept on the thumb of the two hands, are thrown out forcefully by the respective pointed fingers. By this flower-throw the *mantras* that are offered to

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Śiva earlier by the worshipper are lifted. The *mantra* to be recited now, is the *astra mantra*, namely, *om aha astrāya phaṭ*.

The mention above of 'raising the *mantras*' by *Nārāca mudrā* may require some explanation. It is as follows — from the invocation till the final cordiality of showing camphor-light, various *mantras* are offered to — Śiva, including those of his entourage (*āvaraṇa*) and the presentation of *japa mantras* by *Udbhava mudrā*. Now that the *pūjā* is completed these different *mantras* are symbolically lifted by *Nārāca* and joined with Śiva at the respective levels. The arrow-like activity involved in this connection, and use of the powerful *astra mantra* give the real significance to the name '*nārāca*' given to this *mudrā*.

Owing to the violent activity involved in the *Nārāca Mudrā* it is appropriately used during other daily and occasional rites like the following :

1. To remove the obstacles that may prevail in ethereal space (*antarikṣa*) and that may hinder the smooth performance of the *pūjā*.
2. In striking hard the *pāśa-sūtra* tied from head to foot on to the disciple to be given the Nirvāṇa Dīkṣā; also in purifying the five *kalās*.

d. Kumbhaka :

कुम्भकमुद्रा अन्योन्यसम्बद्ध-अङ्गुष्ठद्वया सजलवामहस्ततलोपरि न्यस्तसव्यपाणितला अर्धेन्दुवत् पृष्ठादौ वक्राङ्गुलिपाणिद्वयात्मिका सन्ध्यायां मन्त्राभिषेकादौ कार्या।

In this hand-pose the right palm is placed over the left containing water. In this position the two

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

thumbs touch each other, while the other fingers are in contact with each other in a bent manner so that the whole looks like the digital moon.

This is used while performing *sandhyāvandana* and *mantrābhiṣeka*. The *mantra* to be recited while doing this is *om hām haum śivāya vauṣaṭ*.

Some highlights of the preliminaries and actual worship of Śivaliṅga

1. सकलीकरण (*Sakalīkaraṇa*) of the worshipper.

2. *Nyāsa* on Śivaliṅga.

3. *Mudrās* for the five faces of Śiva, for *āvāhana* etc.

4. Ending with *Mohamudrā*.

In all these rituals the recital of *mantras* along with the appropriate *mudrās* becomes absolutely necessary. This series of rituals would also show their ultimate purpose of elevating the devotee gradually to a status almost equal to that of Śiva, and prove the basic tenet of Saivism that a devotee should worship Śiva only by becoming Śiva : शिवीभूय शिवं यजेत्।

Of course this purpose will be achiéved only in the event of the devotee performing the rituals as prescribed in the Āgamas, and with the necessary purity (*śuddhi*), sincerity (*śraddhā*), and visualisation (*bhāvanā*).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்திரைகள் - அடைவுகள்

Dr. S.S. ஜானகி

(கட்டுரைச் சுருக்கம்)

ஸங்கேதம் அல்லது அடையாள மொழி மனித இனம் போன்றே பழைமையானது. அதன் தோற்றுவாய் அளவற்றது. பொதுவான வழக்கில் உள்ள மிகப் பெரியதோ நுண்ணியதோ சுலபமானதோ அல்லது கடின மானதோ ஆன எல்லாவித பொருட்களுக்கும் செயல்களுக்கும் தொடர்புடையது. அது சமய, ஆன்மீக, ஆத்மானுபவமான விஷயங்களுடன் தொடர்புடையதாக உள்ளது. கலை, மதம் இவற்றில் பயன்படும் சங்கேதங்கள் இயல்பாகவே ஓர் உயர் நடையுள்ளன. அவற்றின் விநியோகம், அவைகளின் உபயோகம் எந்தெந்த நோக்கத்தில் எப்படி அமைகிறது என்று சிறந்த நூல்களில் இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. ஸங்கேதம், இங்கிதம், அங்க விஷேபம் ஸூசனம், அபிநயம், முத்திரை என்பன ஒரு பொருள் கொண்ட வெவ்வேறு அளவில் அறியப்பட்டுள்ள வடமொழிச் சொற்கள். அபிநயம், முத்திரை என்ற இரண்டும் கலை, சமயத் துறைகளில் மிகவும் பிரசித்தமானாலும் அவற்றில் மிகவும் ஆழ்ந்த பொருளை தெளிவுறக் கொணர வேண்டும். இங்கே நாம் முத்திரையின் இயல்பினை சமயத்துறையில் விசேஷமாக சைவ சமயத்தில் உள்ளபடி காண்போம்.

முத்திரை என்ற சிறப்புச் சொல்

முத்திரை என்ற சொல் (முத்ர) வடமொழி இலக்கியத்தில் பல இடங்களில் அடையாள குறிப்பு, வடு, பிரயாண அனுமதி, அடையாள அட்டை, மர்மம், ஸங்கேத மொழி கையசைவு அங்க அடைவு என்ற பொருள்களில் வருகின்றது. மிகப் பழமையான ஹேமசந்திரன் அகராதிகளில் இது சொல் காணப்படவில்லை. இடைக்கால அலங்கார (அணி இலக்கண) வல்லுனர்கள் விசேஷமான பெயர்களுக்கு இரண்டாவது பரிமாண பொருள் தரக்கூடிய முத்ராலங்காரம் என்ற அணிவகையை ஏற்றுக்கொண்டு அடையாளம் காட்டியுள்ளனர். பாணினி தன் அஷ்டாத்யாயியில் "முத்ரா" பற்றி காட்டியுள்ளார். ஆனால் தனது சூத்ரங்கள் 2.3ல் 'முத்' = மகிழ்வு, களித்தல் என்ற மூல(தாது)த்தில் இருந்து 'ரா' என்ற விகுதி சேர்ந்து "முத்ரா"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற சொல் உண்டாவதாகச் சொல்கிறார். சிறந்த இலக்கண நூலோர்களான பாணினியும் ஹேமசந்திரரும் '*முத்ரா*' என்ற சொல்லை உணாதி ஸூத்ரம் மூலமாக விளக்கியிருப்பதால் அது ஒழுங்கான அமைப்புச் சொல்லன்று எனத் தெரிகிறது. '*முத்*' அதன் மூலச் சொல்லாக இருக்கலாம். அல்லது இல்லாமலும் இருக்கலாம். பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் அங்கங்களுக்கும் உபாங்கங்களுக்கும் உரிய பல அபிநயங்களைப் பற்றி கூறியிருப்பினும் '*முத்ரா*' என்ற சொல்லைப்பற்றி குறிப்பேது மில்லை. தற்காலங்களில் *முத்ரா* (முத்திரை) என்ற சொல் தாராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

சைவ சாக்த *முத்ரா* என்பதன் சொல்லிலக்கணம் பலவித வினோதமான வகையில் அதிலுள்ள இரு எழுத்துக்களுக்கு பற்பல பொருள்களைக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளது. இதன்படி '*முத்ரா*' என்ற சொல்லின் பல்வேறு பொருட்களுள் கீழே வருவன சில :-

1. மகிழ்வை (ஸந்தோஷத்தை)-(முத்); கொடுப்பது. (ரா)-முத்ரா. காரணாகமம் - முதம்கரோதி தேவானாம் (முத்ரா தேவர்களை மகிழ்விக்கச் செய்கிறது).

2. இது தேவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து கருணையால் அவர்கள் இதயத்தை உருகச் செய்கிறது. (த்ராவயதி நீர்க்க (உருகச்) செய்கிறது. செயல்பாட்டு வினை) அல்லது அது கடவுளர்களை மகிழ்வித்து அசுரர்களை ஓடச் செய்கிறது. (த்ராவியதி - 'த்ரு' - ஓடுதல் என்ற அடிச் சொல்லில் இருந்து வந்த செயல்பாட்டு வினை; காரணாகமம் – மோதனாத் த்ராவணாச்சைவ முத்ரேயம் பரிகீர்த்திதா)

3. அது ஊழ்வினையை கரைக்கிறது. (அ) அழிக்கிறது.

4. அது ஸாதகனை தீய, வேண்டாத பலன்களினின்றும் விடுவித்து ஊழினை (ஸம்ஸாரத்தளையை) அழிக்கிறது.

5. இது எல்லா தடைகளையும் நீக்கி வெளிவராமல் தடுக்கும், சிவபெருமானின் ஒப்பற்ற ஆத்மதிறன் (வீரியம்) (மிருகேந்த்ரா ஆகமம்)

மேற்கூறிய எல்லா பொருட்களுமே (சடங்குகளில் காட்டும் கையசைவு – அடைவுகளின்) சைவ சமய பூஜை முறைகளில் காணப்படும். இது ஒரு பரந்த ஆய்வுக்கான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷயம். எல்லா சைவ ஆகமங்களும் அவைகளின் மறுமலர்ச்சியாக வந்த பத்ததிகளும் இந்த விஷயத்தைப்பற்றி விவரிக்கின்றன. இப்பொழுது சில முத்திரை வகைகளைப் பார்ப்போம்.

சிவ உருவில் சச்சிதானந்த நிலைகள் (தோற்றம்)

சிவனின் மூன்று வெவ்வேறு உருவங்கள் பரமாத்மாவின் மூன்று நிலைகளைக் கொண்ட உண்மைப் பரம்பொருளின் மூன்று தத்துவத்தைக் குறிக்கின்றன என்பதை முத்திரைகளை ஆராயும்முன் அறியவேண்டும். அம்மூன்று – ஸத் (உண்மையான தூய நிலை) சித் (உணர்வு நிலை), ஆனந்தம் (உயர் மகிழ்வு நிலை) ஆகும். இம் மூன்று உருவங்கள் முறையே சிவனின் பிக்ஷா (அ) கங்காளமூர்த்தி (பிக்ஷை எடுக்கும் சிவனார்), தக்ஷிணாமூர்த்தி (அறிவின் கடவுளாக தெற்கு நோக்கி வீற்றிருக்கும் திருக்கோலம்), நடராஜர் (ஆடல் அரசு) ஆகும். இம்மூன்று மூர்த்திகளும் முறையே - ஸத், சித், ஆனந்தங்களின் அடையாளமாக உள்ளனர். இவ்வுருவங்களின் பிரத்யேகமான (சிறப்பாக) கைகளின் நிலை அதன் தத்துவத்தை விளக்குகின்றன. இந்த ஒன்றுபட்ட நிலை, கட்டைவிரல் (தன்னொளியான சிவனைக் குறிக்கும்) சுட்டு விரலுடன் (ஜீவனைக் குறிக்கும்) ஒன்று சேர இருக்கும் அமைப்பினால் அடையாளமிடப் பட்டுள்ளது. இச்சேர்க்கை ஏற்பட்டவுடன் மற்ற மூன்று விரல்களும் இயற்கையாகவே பிரிந்து நிற்கின்றன. இந்த இயற்கை அமைப்பு, சிறு விரல், மோதிர விரல், நடுவிரல்களால் முறையே அடையாளமிடப் பட்ட மலம் (அழுக்கு) மாயை (மயக்கம்) கர்மம் (வினை) என்ற மூன்று பாசங்களை (தளைகளை) ஜீவன் விட்டொழித்து விடுபடுவதை விளக்குவதாக அமைந்துள்ளது. ஆக சிவபெருமானின் தக்ஷிணாமூர்த்தி வடிவம் பரம்பொருளான சிவனின் 'சித்' என்னும் உடன்உறைத் தோற்றத்தை (அம்சத்தை) வெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறு சிவனின் மேற்கூறிய ஸத், சித் என்ற இருநிலைகளையும் அந்தந்த முத்திரைகள் மூலமாக தெரிந்தபின் நாம் இனி பக்தர்கள் பூஜை, ஜபம், தியானம், மற்றும் விசேஷ சடங்குகளில் (செய் முறைகளில்) உபயோகப்படுத்தும் கைநிலைகளைக் காண்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையில், முத்திரைகள் இல்லாமல் செய்யப்படும் வழிபாட்டு செயல்முறைகள் பலன் அளிக்கமாட்டா என்று அறுதியிட்டுக் கூறப்படுகிறது.

கைகள், விரல்களின் ஸங்கேதங்கள் (அடையாள மொழி)

முத்திரைகள் எவ்வாறு பூஜைகளிலும் மற்றும் சடங்கு களிலும் மிக முக்கியமானதாகவும் மிகவும் உள்ளூரளவுள்ள சக்தி பெற்றதாகவும் ஆகின ? இது தொடர்பாக, சைவாகம நூல்கள் சைவசமய வழிபாட்டு முறையில் கைகளை வெறும் உடலின் ஒரு உறுப்பாக மட்டும் எண்ணக் கூடாது என்று அறுதியிடு கின்றன. பிக்ஷாடன - கங்காளமூர்த்தியில் சிவபெருமானுக்கு நான்கு கைகள். மூன்றில் திரிசூலம், டமரு, கபாலம் (மண்டை ஓடு) ஏற்று கீழே தொங்கவிடப்பட்டுள்ளன. வலக்கை மிருக் (பெண் மான்) முத்திரையில் தூர்வா (அருகம்புல்) தளிர்களை சிவனை உற்று நோக்கிநிற்கும் மானுக்கு கொடுக்கும் நிலையில் உள்ளது, மிருக் முத்ரா - இலக்கணம். மத்திய மோதிரவிரல்கள் இரண்டும் கட்டை விரலில் பதிய வைத்து மற்ற சிறு விரல்களை மேல் உயர்த்தி இருக்கச் செய்வது இந்தக் கையின் தோற்றம். ஒரு பெண்மானின் முகத்தைப் போன்று இருப்பதால் அதற்கு இந்த ம்ருக் முத்ரா என்ற பெயர். இந்த முத்திரை நிலையில் மடிக்கப்பட்ட மத்திய மோதிர விரல்கள் புண்ணியம் பாபம் இரண்டையும் குறிக்கின்றன. கட்டை விரல் ஈச்வரனையும் மூன்று விரல்களின் இடுக்கில் வைத்த தூர்வா (அருகம்புல்) கர்மபலனையும் குறிக்கும். சிவபெருமான் *பிக்ஷாடனனாக* உரு எடுத்து தாருக வாகனத்தில் உள்ள முனிவர்களுக்கு அவர்கள் தீவிரமாக செய்கின்ற சடங்குகள், சம்ஸார துன்பங்களினின்றும் முக்தியளிக்காதுதான் மட்டுமே முக்தி அளிக்க வல்லவன் என்று அறிவுறுத்துவதற்கென்று புராணங்கள் தெளிய விரித்து உரைக்கின்றன. பிக்ஷாடன மூர்த்தியில் மிருக் முத்ரையும் மேல் போக்கியுள்ள உண்மைமானின் முகமும் ஒன்று சேர சிவபெருமானின் ஸத் தத்வத்தை விளக்குகின்றன. ஆகையால் இது ஸத்வம் அல்லது சிவஸத்தாபிவ்யஞ்ஜய ஸன் முத்ரா (சிவ ஸத்தையை வெளிப்படுத்தும் ஸன் முத்திரை) எனப்படுகிறது.

தெற்கு நோக்கியுள்ள உயர் அறிவை அளித்து அருளும் தட்சிணாமூர்த்தி உருவம் மிகவும் பிரஸித்தியானது. மௌன நிலையில் தனது ஆன்மீக சீடர்களுக்கு முக்தி (கடைநிலை) அடைய (உபதேசம்) வழி கூறும் வகையில் அமைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எம்பெருமானின் வலக்கரமே ஞான முத்திரை, வ்யாக்யான முத்ரை, சின்-முத்ரா என்றும் அழைக்கப்படும். சைவ சம்பிரதாயத்தில் இது சிவஜீவ தாதாத்ம்ய சுத்தாத்வைத அபிவ்யஜ்ஜக சின் முத்ரா எனப்படும். சிவனும் ஜீவனும் ஒன்றுபட்ட தூய வேறுபாடற்றதைத் தெரிவிக்கும் சின் உணர்வு நிலையின் அடையாளம். திருக்கையின் அமைப்பு உயர் தத்துவமான (பரம்பொருளை) பரமசிவனுக்கும் ஜீவனுக்கும் உள்ள வேற்றுமையின்மை (ஒற்றுமையை) தெளிவுற விளக்குகிறது. அவைகளை சூரியனாகவும் சந்திரனாகவும் (அல்லது) சிவனாகவும் சக்தியாகவும் கொள்ள (எண்ண) வேண்டும்.

இவ்வாறே சுண்டு விரல் முதல் கட்டை விரல் வரையுள்ள ஐந்து விரல்களும் முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற ஐந்து பூதங்களைக் குறிக்கின்றன. (ஐந்து இயற்கை சக்திகளை அறிவிக்கின்றன). ஆக கைகள் விரல்களை பயன்படுத்தி - ஐந்து இயற்கை சக்திகளுடன் தொடர்புடைய வைகளாக - செய்யப்படும் முத்திரைகள் உண்மையில் அடியார்களுக்கு ஓர் உள்ளார்ந்த மகிழ்வினை உணரச் செய்கிறது.

விரல்கள், சிறப்பாக கட்டை விரலும் மோதிரவிரலும் ஈசானனுடனும் அம்ருதம் (அல்ல) ஸோம கலையுடன் முறையே தொடர்புடையவை. இருப்பினும் எல்லா சைவாகம நூல்களும் கட்டை விரலை சிவபெருமானுடன் தொடர்புடையதாக சொல்லுவதில் ஒத்துப்போகின்றன. பிக்ஷாடன தக்ஷிணாமூர்த்தி உருவ விளக்கத்தில் முன்னமே அங்குஷ்டம் (கட்டைவிரல்) ம்ருக மற்றும் சின் முத்திரைகளில் சிவபெருமானைக் குறிப்பதைக் கண்டோம். இந்த கை மற்றும் விரல்களில் சங்கேதக் குறியீடு வெறும் நூலறிவுடனோ, பரம்பரை வழக்கத்துடனோ நிற்கவில்லை என்பது நியாசம் – குறிப்பிட்ட அங்கங்களைத் தொடுவது அல்லது குறிப்பிட்ட மந்திரங்களை உருப்படுத்துவது– முத்திரைகள் மேற்கொள்வதில் காணப்படுவ தால் அறியப்படுகின்றது.

சில முத்திரைகள்

முதலில் பொருள், செயல், பரிமாணங்களைக் காட்ட பின்வரும் முத்திரைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

1. பஞ்சமுகீ : இந்த முத்திரையில் கைகளில் கைத்தளங்கள் மேல்நோக்கி ஒன்றோடொன்று பிணைந்திருக்கும். ஒரு கையின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கட்டைவிரல் அதன் முனையில் மற்றொரு கையின் சிறு விரலை (சுண்டு விரலை) அழுத்தியிருக்கும். அவ்வாறே வளைந்த சுட்டு விரல் நடுவிரலின் நுனியைத் தொட்டுக் கொண்டிருக்கும். இவ்வாறு இவ்விணை விரல்களின் ஒவ்வொன்றின் முனைகளும் நான்கு திசைகளிலும் நோக்கி இருக்கும். இரண்டு மோதிர விரல்களும் நேரே நிமிர்ந்து நடுவில் நிற்கும் வண்ணம் ஒன்று சேர்த்து வைக்கப்படும். இந்த பஞ்சமுகீ முத்திரை சதாசிவனின் ஐம்முகங்களின் ஒருமித்த வடிவமாக காணப்படும் வண்ணம் உபயோப்படுத்தப்படுகிறது.

2. பூஜைகளுக்கும் ·மற்றும் ஏனைய வழிபாட்டு சடங்குகளுக்கும் வேண்டிய வஸ்துக்களின் பரிமாணத்தை காட்ட பின்வரும் முத்திரைகள் உள்ளன.

அ) அரிசி, பார்லி முதலான தானியங்கள் ஐந்து விரல்களையும் ஒன்று சேர்த்து இடையே உண்டாகும் கொள்ளளவு சமர்ப்பிக்கப்பட வேண்டும். (पञ्चशाखाश्रितं व्रीहियवम्।)

இதற்கு ஸௌகரீ முத்திரை எனப் பெயர். ஏனெனில் கையின் வடிவத்திலே ஒரு பன்றியின் முகத்தைப் போன்று தோற்றமளிக்கும்.

ஆ) எள் கடுகு போன்றவைகள் அடங்கிய கட்டைவிரல், நடுவிரல் மோதிர விரல்களுக்கு இடையே ஏற்படும் ம்ருகீ முத்திரையின் கொள்ளவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (मृगया तिलादिकम्)

3. செயல் :

அ) மணியை ஒலிப்பதற்கு சிகர ஹஸ்தம் பயன்படும்.

ஆ) அங்குசம் அல்லது ஸ்ருணி - இந்த முத்திரையில் சுட்டு விரலின் முதல் நிலை முனை வளைந்திருக்கும்.கையின் நிலை (வடிவு) ஒரு கொக்கியைப் போன்று தோற்ற மளிப்பதால் ஸ்ருணி அல்லது அங்குச முத்திரை எனப்படுகிறது. கொக்கியைப் போன்று இந்த முத்திரை பொருட்களைப் பிடித்து எடுக்க பயன்படுகிறது. இதன் தொடர்பாக வடமொழி வினைச்சொற்கள் 'உத்க்ருஷ்ய' (மேலே எடுத்து) 'ஆக்ருஷ்ய' (தன் பக்கம் இழுத்து) என்பன சரியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இது நித்ய (அன்றாட), நைமித்திக, (விசேஷ சமயங்களுக்கான) சடங்குகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.

இவற்றில் மூன்று கீழே விவரிக்கப்படுகின்றன :

1. சைவர்களின் நித்ய வழிபாட்டு முறையில் ஸ்நானம் முடித்து காலை (அ) மாலை சந்தியாவந்தனத்துக்கு முன் வழிபடுபவன் பிந்து ஸ்தானத்தினின்றும், அங்குச முத்திரை கொண்டு அம்ருதத்தை ஸங்கேதமாக ஹ்ருதய மந்த்ரத்தைச் சொல்லி வெளிக்கொணர வேண்டும்.

2. விசேஷ தீக்ஷையில், மாணவனின் ஆன்மாவை ஸங்கேதமாக வேள்வித்தீயில் வாகீச்வரியின் யோனியில் ஸமர்ப்பிக்கப்படும் சடங்கில் அதன் வீர்யத்தை அதிகரித்து ஒளிரச் செய்யப் பயன்படுகிறது.

3. நிர்வாண தீக்ஷயில் மாணவனுடைய ஆன்மாவை பாசக்கயிறால் கட்டுவதன் சங்கேதமாக ஆசாரியார், மாணவரின் ஆன்மாவை அங்குச முத்திரையால் வெளிக்கொணர்ந்து மாணவனின் பன்னிரண்டாவது முடிவான நிலைக்குக் கொண்டு செல்கிறார்.

இ) நாராச (அம்பு) முத்திரை :

இதில் இரண்டு கைகளின் கட்டை விரல்களில் வைக்கப்பட்ட புஷ்பங்களை சுட்டு விரல்களால் வலிந்து எறிவது. இந்த மலர் எறிதலால் வழிபடுபவன் முன்னரே சிவனுக்கு சமர்ப்பித்த மந்த்ரங்கள் மேலே எழுப்பப்படுகின்றன. இதில் அஸித்ர மந்த்ரம் பயன்படுத்தப்படுகிறது.

ஆரம்ப பிரார்த்தனை முதல் - கடைசியில் செய்யும் உபசாரமான கற்பூர ஹாரத்தி வரை, பல மந்திரங்கள் சிவபெருமானுக்கு அவரது முத்திரையால் ஆவரண தேவதைகளுக்கும், ஜபமந்திரங்கள் உட்பட அனைத்தும் ஸமர்பிக்கப்படுகின்றன. பூஜை முடிந்த வேளையில் இந்த பலவித மந்திரங்கள் ஸங்கேதமாக நாராச முத்திரையின் மூலம் மேலே எழுப்பப்பட்டு, சிவபெருமானுடன் அந்தந்த நிலைகளில் சேர்க்கப்படுகின்றன. அம்பினைப் போன்ற செயல்முறை இதில் செயல்படுவதாலும், மிகவும் சக்தி வாய்ந்த அஸ்த்ர மந்திரத்தை பயன்படுத்தப்படுவதாலும் இந்த முத்திரைக்கு நாராசம் என்ற பொருள் மிகு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாராச முத்திரையில் மிகவும் தீவிரமான செயல்பாடு உள்ளதால் இது தகுந்தவாறு மற்ற நித்திய, நைமித்திக பூஜை முறைகளில் (சடங்குகளில்) கீழ் வருவனவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

1. அந்தரிக்ஷம் என்ற விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பகுதியில் ஏற்படும். பூஜையை சரிவர செய்வதை பாதிக்கும் தடைகளை அகற்றுவதற்கு.

2. நிர்வாண தீக்ஷைத் தரப்படவேண்டிய மாணவனது தலைமுதல் கால் வரை கட்டப்பட்ட பாச சூத்திரத்தை (பாசக் கயிற்றை) மிகவும் அழுத்தமாக அறுப்பதிலும், மற்ற ஐந்து கலைகளையும் தூய்மைப்படுத்துவதிலும்

ஈ) கும்பகம்

இந்த கைநிலையில் வலது கைத்தளம் தண்ணீர் உள்ள இடது கைத்தலத்தின் மீது வைக்கப்படுகிறது. இந்த நிலையில் இரண்டு கட்டை விரல்களும் ஒன்றுக்கொன்று தொட்டுக் கொண்டு இருக்கும். மற்ற விரல்கள் ஒன்றுக்கொன்று வளைந்த நிலையில் தொட்டுக் கொண்டிருக்கும். இந்த நிலையில் முழுவதும் பிறைச்சந்திரன் (அரை) வடிவில் காணப்படும். இது ஸந்த்யாவந்தனம் செய்யும்போதும், மந்திராபிக்ஷேகத்தின் போதும் உபயோகப்படுத்தப்படுகிறது. இது செய்யும்போது சொல்லப்பட வேண்டிய மந்திரம் ''ஓம் ஹாம் ஹௌம் சிவாய வௌஷட்'' ஆகும்.

அனைத்து சிவபூஜை முறைகளிலும் (சடங்குகளிலும்) மந்திரங்களை அதற்குரிய முத்திரைகளுடன் உச்சரிப்பது மிகவும் அவசியமாகும். இத்தகைய சடங்குகளின் வரிசை, பூஜைகள் செய்யும் பக்தனை கிரமப்படி சிவனுக்கு நிகரான ஒரு நிலையை அடையும் கடைப்பயனை உடையதாக அமைந்துள்ளதைக் காட்டுகின்றது. மேலும் சைவ சமய அடிப்படை தத்துவமான சிவபக்தன் தானே சிவமயமாகிய சிவனை வழிபட வேண்டும் என்பதனை நிரூபிக்கின்றது.

'சிவீ பூய சிவம் யஜேத்' என்னும் இத்தகைய உயர்நிலை சிவ பக்தனுக்கு, அவன் இந்த வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் முறைப்படி ஆகமங்களில் விதிக்கப்பட்ட வகையில் தேவையான ஆன்ம, தேஹ சுத்தி (தூய்மை) உண்மை உள்ளுணர்வு (சிரத்தை), பாவனை (நல்ல எண்ணம், பார்வை) கொண்டு நிறைவேற்றினாலே கிடைக்கப்பெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ĀṞUMUGA NĀVALAR'S INSTRUCTION IN THE WORSHIP OF ŚIVA*

DENNIS D. HUDSON

Āṟumuga Nāvalar of Nallur, Jaffna (1822 - 1879), was an early Śaiva "missionary". With great learning and passion he addressed the Tamil-speaking men and women of India and Sri Lanka who had been initiated into the Śaiva religion, but who were indifferent to its way of life or ignorant of it. Such Śaivas, he believed, were prey to the Christian missionaries, especially the Protestants. That ignorance, he thought, explained the increasing conversion of Śaivas to Christianity by the mid-nineteenth century, conversions that inevitably led to painful future births. As a devout initiate into agamic worship, Nāvalar's life work was to regenerate the religion based on Veda and Āgama, so that people fortunate enough, he held, to be born as Śaivas could receive its benefits, the greatest of which is complete emancipation from birth and death.

Two of his Tamil writings are explored here, highlighting Āṟumuga Nāvalar's teaching to those Śaivas about the proper worship of Śiva in the temple according to Āgama.

The first is "The Proper Way to worship at Śiva's Temple" (*Śivālaya Darśana Vidhi*), a pamphlet he wrote in 1851 and published in the Tamil press he had established two years earlier at Jaffna. The religion he

* Only the abstract of the paper is printed here.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

expounded is known theologically as "Saiva Orthodoxy" (*Śaiva Siddhānta*) as formulated by Meykaṇṭadēvar in the thirteenth century. Based on Vedas as interpreted through Āgamas, the religion is an observance (*samayam*) that mixes practice and doctrine so that practice may lead the initiate gradually toward a greater vision of Śiva, the soul, and the world.

Central to the practice is the worship of Śiva in one of the temples where he resides in the form of icons, primarily as a *liṅga* embedded in a pedestal (*yoni*). Śiva with his Śakti or gracious energy indwells the *liṅga* and *yoni*, the *liṅga* signifying Śiva and the *yoni* signifying his Śakti. Śiva and Śakti take up residence in that double icon through elaborate liturgies conducted by priests who follow rites believed to have been revealed by Śiva in Āgamas. Nāvalar has explained in detail what people are obligated to do when they visit the temple in order to obtain the vision (*darśana*) of Śiva. Following convention he used the male worshipper to represent practices obligatory for both men and women, making a distinction between them only when the rites require it. In Śaiva Orthodoxy women and men may receive the same initiations for worship and Yogic practice and both may attain the ultimate goal of emancipation.

In the pamphlet, Nāvalar explained the ideal practice. He knew that approximation to that ideal depends on individual motivation, yet, as is customary in Hindu liturgical instruction, he did not explain what those ideal acts mean. One reason is that some meanings are embedded in traditional Tamil culture and do not have to

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

be explained. Another is that an explicit interpretation of the rites will be given to initiates only after they have first mastered them.

As Nāvalar's emphasis in the pamphlet confirms, correct performance is crucial whether one understands the meaning of the rite or not. Unintended faulty performance will generate negative Karmic fruits that nevertheless may be removed through rites of purification, while intended faulty performance may not be purified at all. The concepts of rebirth and multiple hells explain how acts are punished after death. The intention of one's actions is crucial to Hindu thought and Nāvalar was concerned about the matter, believing that proper intention is developed through education. Among his many Tamil works, for example, he wrote an extensive Śaiva catechism.

The second writing explored here is the booklet, "The Abolition of the Abuse of Saivism" (*Caiva Dūṣaṇa Parikāram*), which Āṟumuga Nāvalar wrote and published from his own Jaffna Press in 1854. It was a major refutation of Protestantism and highly effective in curbing the success of British and American missionaries in Sri Lanka. In this work he utilised his detailed and sophisticated knowledge of the Christian Bible that he had gained from eight years (1841 - 1848) assisting Peter Percival in translating the Bible into Tamil. To refute painful attacks on Śiva and his worship by the missionaries of the time, Nāvalar used his extensive biblical knowledge to aruge that far from being heathenish as the missionaries claimed, the worship of Śiva is

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

fundamentally similar to the worship prescribed in the *Old Testament* and followed by Jesus at the Temple in Jerusalem. Since there are such similarities, Nāvalar asked repeatedly, what justification do the missionaries have for opposing the worship of Śiva in temples ?

To make his argument clear, and to provide instruction to the Śaivas who were to use the booklet in countering the missionaries, Nāvalar provided a considerable amount of information about the worship of Śiva. He grouped the liturgical categories for discussion into two sets. The first set develops fourteen themes in the temple liturgy addressed to the one God, Śiva. The second set treats seven specific personal and institutional practices related to that liturgy.

As revealed in these two writings, Āṛumuga Nāvalar's learning in Āgama was considerable. Produced by him in the modernising context of conflicting religious and cultures, yet written in Tamil and addressed to Śaivas, they serve us today as invaluable 'insider's guides' to the worship of Śiva according to the Śaiva Āgamas.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவ பூஜை பற்றிய ஆறுமுகநாவலர் கூறிய அறிவுரைகள் :

டென்னிஸ் ஹட்ஸன்

(கட்டுரைச் சுருக்கம் – தமிழாக்கம்)

யாழ்ப்பாணம் நல்லூரைச் சார்ந்த ஆறுமுக நாவலர் பழம்பெரும் சைவாகம (1822–1870) வல்லுனர் – போதகர் ஆவர். மிகுந்த அறிவுத் திறனுடனும் ஆர்வத்துடனும், சைவ சமயத்தில் உபதேசம் பெற்று அதன்படி வாழ்வு முறையை கடைப்பிடிப்பதில் அக்கறையற்ற, எதையும் அறியாத தமிழ் பேசும் பாரத இலங்கை மக்களுக்கு சொற்பொழிவாற்றினார். அத்தகைய சைவர்கள் சைவத்திற்கு எதிரான கிருஸ்துவ போதகர்களின் சிறப்பாக அவர்களுள் மறுதளிப்பு வகையைச் சேர்ந்தவர்களின் தூற்றுதல்களுக்கும், விவாதங்களுக்கும் பலியாகியதாக நம்பினார். அந்த அறிவின்மையே 19ஆம் நூற்றாண்டு மத்தியில் சைவர்கள் கிருஸ்துவ மதத்தை பெரும்பாலும் தழுவவும், இதனால் அவர்ளின் பின் சந்ததியினரின் துயரத்திற்கும் காரணமாகும் என்று உணர்ந்தார். ஆகம வழிபாட்டில் வேறூன்றிய பக்திமானான நாவலருடைய வாழ்க்கையில் நெறியான பணி, நற்வினை பயனாக சைவராக பிறப்பவர்கள், பிறப்பு இறப்பு ஆகியவற்றினின்றும் விடுபடும் முக்தியை அடையவும், பெரும்பேற்றை அடையும் வகையாக வேத ஆகமத்தின் அடிப்படையில் சைவ சமயத்தினை புத்துயிர் ஊட்டி வளர்ப்பதே ஆயிற்று.

இக்கட்டுரை ஆறுமுக நாவலரின் ஆகம முறையில் சிவ வழிபாட்டை செவ்வனே நடத்தும் வகையில் செய்த அறிவுரை-களை ஆராய்கிறது. இது ஆறுமுக நாவலரின் இருநூல்களை முதல் ஆதாரமாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.

முதல் நூல் அவர் 1815-ல் அதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அவர் நிறுவிய தமிழ் அச்சகத்தில் துண்டுப்பிரசாரமாக வெளியிட்ட சிவாலய தர்சன விதி எனும் நூலாகும். அவர் எடுத்துரைத்த ஆன்மீகக் கொள்கையளவிலான, சமயம், 13வது நூற்றாண்டில் மெய்கண்டதேவர் அருளிய சைவசித்தாந்தம் ஆகும். இது வேதங்களை அடிப்படையாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு ஆகம வழிநின்று அறிமுறையும், செயல்முறையும் ஒன்றுசேர, செயல்முறை, சிவன், ஆன்மா, உலகு ஆகிய மூன்றன் தொடர்பினைச் சிறப்புற தெளிந்தறிய உதவிடும் சமயம் ஆகும்.

செய்முறையின் நடுநாயகமாக இருப்பது ஆலயங்களில் ஆவுடையாரின் மேல் விளங்கும் லிங்க வடிவில் விளங்கும் சிவபெருமானின் பூஜை ஆகும். சிவனார் தன் அருள் வடிவான சக்தியுடன் லிங்க யோனி (ஆவுடையார்) வடிவில் அருள் பாலிக்கின்றார். லிங்கம் சிவன் வடிவாகவும் யோனி சக்தி வடிவாகவும் உள்ளனர். சிவனும் சக்தியும் இவ்விருவடிவாக இருந்து சிவபெருமானே உகந்தருளியதாகக் கருதப்படும் ஆகம செய்முறைகளின்படி பூஜைகளை விரிவாக ஏற்கின்றனர். சிவதர்சனத்திற்காக ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் கடமைகளையும் நாவலர் விரிவாக எடுத்துரைத்துள்ளார். இக்கட்டுரை அவரது அறிவுரைகளை ஆழ்ந்து விவரிக்கிறது. வழி வழி நடைமுறைகளைப் பின்பற்றி அவர் ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் ஆண்களையே பிரதிநிதியாக ஏற்று சடங்குகள், செய்முறைகளுக்கு ஏற்றபடி தேவைக்கேற்ப இருபாலருக்கும் சில வேறுபாடுகளைக் கூறியுள்ளார். சைவ சமயத்தில் ஆண் பெண் இருபால்ரும் ஒரே வித (தீக்ஷை) பூஜைக்கான உபதேசமும், யோக முறைப் பயிற்சியும் பெறலாம். இருபாலருமே கடைநிலையான முக்தியடையத் தக்கவர்கள்.

இந்த பிரசுரத்தில் நாவலர் முன்மாதிரியான முழுமையான செயல்முறையை விளக்கியுள்ளார். ஒவ்வொருவரது எண்ண இயக்கத்தில் அடிப்படையிலேயே இது முடியும் என்றறிந்தும் இந்து ஆன்மீக அறிவுரைகளுக்கேற்ப இத்தகைய செய்முறை-களின் உட்பொருளை விளக்கவில்லை. எல்லா உட்பொருட்-களும் தொன்றுதொட்டு வரும் தமிழ் கலாசாரத்தில் காணக் கிடைக்கின்றன என்பதால் அவைகளை விளக்கத் தேவையில்லை என்ற ஒரு காரணம். மற்றொரு காரணம் - இத்தகைய வழிபாட்டு செயல்முறைகளை முதற்கண் முழுமையாக அறிந்து கொண்டபின் உபதேசம் பெற்றவர்களுக்கு அவைகளின் உட்பொருளை உள்ளபடி சொல்லித்தர வேண்டும். நாவலர் இந்தப் பிரசுரத்தில் உட்பொருளை ஒருவன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரியான வழிபாட்டு செயல்முறை மிகவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவசியமானது என்று அறுதியிட்டு கூறுகிறார். அறியாமல் செய்யப்படும் தவறான செயல்முறைகள் வழிபாட்டின் மாறுபட்ட பலனை தரவல்லது. அத்தகைய குறைகள் பிராயச்சித்த சுத்தி கர்மாக்களால் நீக்கப்படுகின்றன. ஆனால் மனம் அறிந்து செய்யும் தவறான செய்முறை பரிசுத்தி செய்ய முடியாதது. மறுபிறவி, பலவித நரகங்கள் ஆகிய கோட்பாடுகள் இறப்புக்குப்பின் அவரவர் கர்மத்திற்கு (வினைக்கு) தண்டனைகள் உள்ளதைக் காட்டுகின்றன. இந்து மதத்தில் செய்பவனின் உள்ளார்ந்த ஈடுபாடு செயல்பாட்டில் மிகவும் முக்கியமானது. இந்த உள்ளார்ந்த ஈடுபாடு நாவலரின் மனம் கவர்ந்த ஒன்று. இந்த ஈடுபாடு சரியான கல்வி அறிவின் மூலம் வளர்க்கப்படுகிறது என்று அவர் உணர்ந்து நம்பினார். அவரது தமிழ் நூல்களுள், பல வினா-விடை வடிவமைப்பில் விரிவான சைவ நூலாக அமைந்துள்ளன.

இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டாவது நூல் ஆறுமுக நாவலர் எழுதி, அவரது யாழ்ப்பாண அச்சகத்தில் 1854-ஆம் ஆண்டு வெளியிட்ட 'சைவதூஷண பரிகாரம்' என்ற நூலாகும். மறுதலை கிருஸ்தவமத கோட்பாடுகளை கடுமையாக எதிர்த்து எழுதிய இந்நூல் இலங்கையில் பிரிட்டன் மற்றும் அமெரிக்க கிருஸ்துவமத போதக நிலையங்களின் வெற்றிகரமான வளர்ச்சியை கட்டுப்படுத்தி, தடுக்க மிகவும் வகை செய்தது இந்நூலில் அவர் தான் 1841லிருந்து 1848 வரை 8 வருடங்கள் பீட்டர் பொசிவால் என்பாருக்கு பைபிளை தமிழில் மொழிபெயர்த்து உதவியதன் மூலம் பெற்ற நுண்ணிய விரிவான பைபிளின் அறிவை உபயோகித்துள்ளார். சிவவழிபாட்டையும், சிவன் தத்துவத்தையும் மிகவும் புண்படும் வகையில் அது கடவுள் தன்மையற்றது என்று கிருஸ்துவ போதகர்கள் கூறிய கூற்றை ஆணித்தரமாக மறுத்து சிவவழிபாடு அடிப்படையில் பைபிளின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள ஜெருசேலத்தில் ஏசுவால் பின்பற்றப்பட்ட வழிபாடு முறைக்கு ஒப்பானது என்று பைபிளில் தனக்குள்ள முழு அறிவினை பயன்படுத்தி எடுத்துக் காட்டியுள்ளார். இப்படி பைபிளுக்கும் சைவாகம நூல்களுக்கும் ஒற்றுமையும், ஒப்புமையும் இருக்கையில், இந்த கிருஸ்துவமத போதகர்கள் ஏன் ஆலயங்களில் சிவ வழிபாட்டை எதிர்க்கிறார்கள் என திரும்பத் திரும்ப கேட்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனது வாதங்களைத் தெளிவாகவும் சைவர்களுக்கும் கிருஸ்துவ போதகர்களை மறுதளித்து இந்த பிரசுரத்தை பயன்படுத்தும் வகையாக அறிவுரை வழங்கவும், நாவலர் சிவபூஜை விஷயமாக, நம் கருத்தைக் கவரும் வகையில் அரும்பெரும் தகவல்களைத் தந்துள்ளார். இந்த ஆன்மீக விவாதங்களை இருவித கூறுகளாகப் பிரித்துள்ளார். முதல்கூறு பதினான்கு விவாதம் செய்ய வேண்டிய – சிவன்தான் ஒரே கடவுள் என்று அறுதியிட்டுக் கூறும் – விஷயங்களைக் கொண்டது. இரண்டாவது கூறு சைவசமயத்தில் அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகளும் அத்தகைய சமய நிறுவனங்களில் செய்ய வேண்டிய கடமைகளும் எடுத்துக்கூறும் ஏழு முக்கிய விஷயங்கள் அடங்கியது.

இந்த இரு நூல்களில் கூறப்பட்ட விஷயங்கள் மூலம் ஆறுமுக நாவலரின் ஒப்பற்ற சீரிய ஆகம அறிவு அறியப்படுகிறது. தற்கால மத கலாசார முரண்பாடுகள், வேறுபாடுகளுக்கும் இடையில், தமிழில் இயற்றப்பட்டதா யிருப்பினும், சைவர்களைக் குறித்து கூறப்பட்ட அறிவுரையாக அமைந்துள்ள இவை, சைவ ஆகம முறைப்படி சிவனை வழிபடுவதற்கு உகந்த ஒப்பற்ற ஓர் விலைமதிப்பற்ற அந்தரங்க உற்ற துணையாக விளங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவித்ரோத்சவ விதி
(பவித்ராரோஹண விதி)

S. அருணசுந்தரம்

அனாதியாகவும், மலரஹிதனாயுமுள்ள பரமேச்வரனால் ஆன்மாக்கள் முக்தி பெறுவதற்கு சிவாகமங்கள் உபதேசிக்கப் பட்டன. சிவாகமங்களில் பூஜைகள் நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகையில் விதிக்கப்பட்டுள்ளன. தினமும் அனுஷ்டிக்கத்தக்கவை 'நித்யம்' என்றும், ஒன்றை நிமித்தமாக வைத்து செய்யத் தக்கவை 'நைமித்திகம்' என்றும், தனக்கு விருப்பமான நாட்களில் செய்யப்படும் பூஜை 'காம்யம்' எனவும் அழைக்கப்படுகின்றன. பூஜைகளில் ஏற்படும் குறைகளை நீக்கவும், நிறைவை ஏற்படுத்தவும்'பவித்ராரோஹணம்'' செய்யப்படுகிறது.

பவித்ர-பத-விசாரம்

பொதுவாக 'பவித்ரம்' என்ற சொல்லுக்கு புனிதம் என்று பொருள். புனிதத் தன்மையை ஏற்படுத்துவதே 'பவித்ராரோஹணம்' என்பது. पविः என்றால் வஜ்ரத்திற்குப் பெயர். पवेः त्रायते इति पवित्रम् அதாவது வஜ்ரநாமகமான நரகத்திலிருந்து காப்பதாலே பவித்ரம் என்று பெயர்.

'सन्त्रायते यन्नरकात् पुमांसं वज्राभिधानाच्च ततः पवित्रम्'

என்று கூறுவர். மேலும் 'पूजावैकल्यतः पुनाति इति पवित्रम्' என்றும் கூறுவர். பூஜையில் வரும் குறையை நீக்கி புனிதப்படுத்துவது என்று பொருள் இதையே *காரணாகமத்தில்*

'पवित्रकमहं वक्ष्ये सर्वदोषनिकृन्तनम्'

என்று கூறப்பட்டுள்ளது. 'பவித்ரம்' என்னும் சொல் தர்ப்பை, அக்ஷதை, புஷ்பம், அருகு ஆகியவற்றை நித்ய விதியில் குறிக்கும். வார்ஷிக பவித்ர விதியில் பொன், பட்டுநூல், பருத்தி நூல் போன்றவற்றால் செய்யப்பட்ட பூணூலை அல்லது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கங்கணத்தை குறிக்கும். 'पुवः संज्ञायाम्' என்ற பாணினி சூத்திரப்படி 'पूङ्-पवने' என்ற தாதுவுடன் 'इत्र' எனும் ப்ரத்யயத்தைச் சேர்ப்பதால் 'பவித்ரம்' என்ற குறிப்புச்சொல் (संज्ञावाचकम्) ஏற்பட்டது.

பவித்ர வகைகள்

நித்ய பவித்ரம், நைமித்திக பவித்ரம், காம்ய பவித்ரம் என பவித்ரம் மூன்று வகை.

நித்ய பவித்ரம்

தினசரி பூஜைகளில் ஏற்படும் தோஷங்களை நீக்கி புனிதமேற்படுத்த பூஜையின் முடிவில் புஷ்பாக்ஷத தர்பங்-களாலும் அருகு-பில்வங்களாலும் த்ரிதத்வ மந்திரங்களாலோ, சர்வ தத்வ மந்திரத்தாலோ, இவை இரண்டினாலேயோ சாத்தப்படுவது நித்யம். இந்த பவித்ரம் இல்லாத பூஜை தாமஸ பூஜை என்று கூறுகிறது, *மோஹசூரோத்தராகமம் :*

'पवित्रेण विना पूजा तामसी परिकीर्त्तिता'

நித்ய பூஜையில் பவித்ரமளிக்கத் தவறிவிட்டால், அந்த பூஜையில் ஏற்பட்ட குறைகள் பலனை அடையவிடாமல் தடுக்கும். இது போன்று தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட தோஷங்களை நீக்கி வார்ஷிக பூஜா பலனை அடைய நைமித்திக பவித்ரம் முக்கியம் ஆகும்.

நைமித்திக பவித்ரம்

ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில், சுக்லபக்ஷம் அல்லது க்ருஷ்ண பக்ஷத்தில், அஷ்டமீ அல்லது சதுர்தசியில் பவித்ரோத்சவம் என்ற பவித்ராரோபணத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஸோமசம்பு சிவாசாரியார் போன்றோர் இதை, காலத்தை (ஆடி, ஆவணி, புரட்டாசி) நிமித்தமாக வைத்துச் செய்வதால் நைமித்திகம் என்று கூறுவர். நிர்மலமணிதேசிகர் போன்றோர் நித்யாங்கம் என்று சொல்கின்றனர். லதாலிங்கிதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போன்ற மண்டலத்தில் சுவாமியை பூஜித்து, கால ஸ்வரூபியான பகவானுக்கு வ்ரத த்ரவ்யங்களை நிவேதித்து, வார்ஷிக தோஷங்களை மன்னிக்கும்படி ப்ரார்த்தித்து பவித்ரம் அணிவிப்பதே இதன் க்ரியைகள் ஆகும்.

நித்ய பவித்ரரான ஈச்வரனுக்கு பவித்ரம் சாத்துவதால் நமது குற்றங்கள் நீங்கி, நாம் புருஷார்த்தத்தைப் பெறுகிறோம். இதை ஞானசம்பு சிவாச்சாரியார் : ''पवित्रभूतस्य पवित्र दानम् तापत्रयघ्नं सकलार्थसिद्धौ'' என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

PAVITROTSAVAVIDHI
(PAVITRĀROHAṆA VIDHI)

S. ARUNASUNDARAM

(Synopsis)

Śaivāgamas have been imparted by the Eternal Supreme Lord Parameśvara Śiva who is devoid of any *mala* (defect), for the sake of the living souls to get liberation (from the worldly bondage). The Śaivāgama pūjā has been classified into three categories as *nitya, naimittika* and *kāmya.* Those to be observed in the daily routine are *nitya.* Those with a particular target are *naimittika* and those observed on days of one's own choice are *kāmya.* To remove the deficiences in the pūjās and to ensure fullness of performance of worship, the *pavitrārohaṇa* is performed.

Pavitra-pada-vicāra

In quest on the word *pavitra* - generally, *pavitra* means sacred (pure). *Pavitrāropaṇa* is to ensure purity and sacredness. *Paviḥ* means the thunderbolt or mace (of Indra) - पवेः त्रायते इति पवित्रम्. Because it saves the soul from the thunderbolt of Naraka (hell) it is so called *pavitra:* संत्रायते यन्नरकात् पुमांसं वज्राभिधानाच्च ततः पवित्रम्॥

It is further defined as पूजा वैकल्यतः पुनाति इति पवित्रम्— because it sanctifies after removing all deficencies and defects in the performance of *pūjā.* The same is expressed by *Kāraṇāgama* thus-पवित्रमहं वक्ष्ये सर्वदोषनिकृन्तनम्.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In *Nityavidhi* the word *pavitra* refers to *darbha* grass, *akṣatā,* flowers and the *dūrvā* grass. In the *Vārṣikapavitravidhi* it refers to the sacred thread or the wrist band (*kaṅkaṇa*) made up of gold, silk thread and cotton thread.

According to Pāṇini' *sūtra* — पुवः संज्ञायां, the word *pavitra* is coined as an indicative word (संज्ञावाचक) with the suffix इत्र added to the root पूङ् पवने

Kinds of Pavitra

Nitya pavitra, naimittika pavitra and *kāmya pavitra* are the three kinds of *pavitra.*

Nitya pavitra

It is that which is offered at the close of the daily *pūjā* (worship) to get sanctity after removing the deficiencies or defects of the *pūjās* offered - comprising *puṣpa, akṣatā* and *darbha, dūrvā* grass and *bilva* leaves with the *tritattva* and *sarvatattva mantras* or both combined.

The *Mohaśūrottarāgama* tells that the worship done without *pavitra* is deemed to be *tāmasa-pūjā* (lowest type of worship done out of *tamas* ignorance thus : पवित्रेण विना पूजा तामसी परिकीर्त्तिता।

If *pavitra* is not offered in *nityapūjā* the deficiencies or defects in the *pūjā* will block the fruits of *pūjā.* To avoid such deficiencies committed, unaware or with knowledge and to get the fruit of the worship of the full

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

year (annual *pūjā*), *naimittika pūjā* is significantly prescribed.

Naimittika pavitra

The ritual *Pavitrotsava* or *Pavitrāropaṇa* it is to be performed in the month of Āḍi, Āvaṇi and Puraṭṭāsi, in the Śukla or Kṛṣṇapakṣa Aṣṭami or Caturdaśī. Teachers like Somaśambhu Śivācārya call it *naimittika* since it is done with a particularity of the time - the month Āḍi, Āvaṇi and Puraṭṭāsi. Teachers like Nirmalamaṇi deśika call it *nityāṅga* (an accessory to nitya). This has the ritual acts of offering *pavitra* praying to the Lord to condone and pardon for the sins and deficiencies of the year and offering to Him the *vrata dravyas,* after offering worship to the Lord enshrined in the *maṇṭapa* appearing as *latāliṅgita* (embraced by the creeper like goddess) as the Lord is the embodiment of *kāla* (Time).

By offering *pavitra* to the ever *pavitra* (pure) Īśvara (Lord Śiva) we get cleaned of our sins and defects and the triple miseries and get the four-fold means of human endeavour, *puruṣārtha (dharma, artha, kāma* and *moksha).* Jñanaśāmbhu Śivācarya tells thus :

पवित्रभूतस्य पवित्रदानं तापत्रयघ्नं सकलार्थसिद्धौ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

APPENDIX

SANDHYĀHVĀNA — SANDHYĀVĀHANA*

(Invitation to and invocation of the divinities at the nine cardinal points)

Introduction

Called also Nava-sandhi and Brahma-tālavidhi in Agamic, musical and dance texts, this item is unique and rich in aesthetic, intellectual and esoteric content.

It is mainly the worship of the divinities presiding at the nine cardinal points, namely the centre, and the junctures (*sandhis*) of the quarters and the intermediary directions. They are the well-known gods, Brahmā, Indra, Agni, Yama, Nirṛti, Varuṇa, Vāyu, Kubera and Īśāna.

The Āgamas prescribe an elaborate worship of the above gods at the time of annual Brahmotsava in a Śiva temple, after the flag is hoisted at the Dhvajārohaṇa function, and the decorated *pañca-mūrtis* (Vighneśvara, Subrahmaṇya, Śakti and Śiva and Caṇḍeśvara) are to be taken in procession within and around the temple.

The purpose of this worship is the invitation (*āhvāna*) extended to the divinities to be present at the precincts of the temple and its location throughout the festival. This is to be performed for 9 or 10 days of the

---

* The matter prepared and presented by Dr. S.S. Janaki on the occasion of the performance during the seminar is given here. More work has to be done on this. – Ed.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

festival, after which, at the Dhvajāvarohaṇa function they are permitted to leave (*visarjana*).

The *āhvāna* consists of Sanskrit verses of salutation (*namaskāra*) to the god, the description of his form with iconographical details, his associate group (*gaṇa*), and a formal invitation in verse (*padya*) and prose (*gadya*).

He is then invoked (*āvāhana*) and offered *bali.* Then cordialities (*upacāras*) in the form of Vedic recitation, songs in different melodies, varied *tālas*, and dance are offered to him.

The Śivācārya starts the worship of Brahmā at the Balipīṭha in the centre before the Astra in which all gods are present on account of imposition (*nyāsa*), and who also is considered a witness (*sākṣī*). He then moves on to the other cardinal points, east, south-east etc., and ends with north-east (*Īśāna*). During this movement the musical ensemble consisting of Vīṇa, flute, Mṛdaṅga, Maddala, Śaṅkha, Kāhala, Kāmsya, Paṭaha and Ḍhakkā, is to be played.

This must have been an enjoyable audio-visual programme rich in ritual, Saṅgīta in all its aspects of music (vocal and instrumental and dance) and beautiful Sanskrit verse and prose and also performed quite leisurely, in an atmosphere surcharged with devotion.

Problems in compiling this programme

The details of the worship are scattered in Āgamas, Paddhatis, Kavuthuvams (dance songs) and Tāla works, which are not easily accessible. Again, there are

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

differences in the names of *rāgas, tālas* and *vādyas* amongst the lists available in them. Names of both *paṇs* and *rāgas* are given; so also the *tālas* are mentioned separately and under the category of *vādyam*. Some of these names are either corrupt or not known in current practice.

The Programme

Dr. S. S. Janaki presented a condensed version of the Sanskrit prose and verse recitation, vedic hymns, *paṇ*, *rāga* and the *tālas*, as reconstructed authentically by going through the available material in texts (*lakṣaṇa*) and actual practice (*lakṣya*) and these are given here.

Details for the nine *sandhis* :

Position	Deity	Vedic hymn	Paṇ	Tālam	Rāgam	Vādyam
Centre	Brahmā	ब्रह्मज्ज्ञानम्	Megharāga Kuriñji	Brahma	Madhyamāvatī	Cacchatputam
East	Indra	त्रातारमिन्द्रम्	Gāndhāra Pañcamam	Sama	Lalitā	Cācaputam
South-East	Agni	त्वन्नो अग्ने	Kolli	Mattavaranam	Varālī	Udghaṭitam
South	Yama	सुगन्नः पन्था	Kauśikam	Bhringini	Saurāṣṭram	Matyam
South-East	Nirṛtti	असुन्वन्तन्	Naṭṭabhāṣā	Malla	Bhairavī	Khaṇḍa Atha
West	Varuṇa	तत्वायामि	Śrīkumāra	Nava	Behāg	Simhanādam
North-West	Vāyu	आनो नियुद्भिः	Takkesi	Bali	Pantuvarālī	Jampata
North	Kubera	वयः सोम	Gāndhāram	Gauli	Mālavī	Samkirṇa Rūpaka
North-East	Īśāna	तमीशानम्	Salapani	Dhakkari	Śaṅkarābharaṇam	Miśra Eka

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

THE KUPPUSWAMI SASTRI RESEARCH INSTITUTE

(Regd. S. No. 32/1944-45 dt. 24.2.1945)



The Kuppuswami Sastri Research Institute was founded in 1944 in memory of the great Sanskrit scholar and savant Mahamahopadhyaya Prof. S.Kuppuswami Sastri, a rare scholar who combined in him the depth of traditional knowledge and modern research acumen.

The Institute is a unique organisation which has been doing yeoman service for the promotion of Sanskritic and Indological research for more than five decades through various means.

The K.S.R.I. has so far published more than 50 research books and monographs in Sanskrit and English on various aspects of Indian literature and philosophy, including critical edition of rare ancient texts in manuscripts, notable among them being Tolkāppiyam, Arthaśāstra with two different commentaries and texts on Astronomy, Mathematics, Āyurveda, Mīmāmsā and other systems of philosophy as well.

The Journal of Oriental Research, started in 1927, by Prof. S. Kuppuswami Sastri and subsequently published by the Institute is internationally renowned and carries valuable research articles on Indological subjects by well-known scholars from India and abroad.

The Institute is affiliated to the University of Madras for M.Phil. and Ph.D. in Sanskrit from 1982 and many candidates from the Institute have been awarded the degrees by the University. The Institute is also affiliated to the Rashtriya Sanskrit Samsthan, New Delhi for Vidyavaridhi (Ph.D) course. Besides many foreign scholars from U.K., Europe, U.S.A., Canada and other countries have conducted research here for their Ph.D and post-doctoral projects on different topics.

The K.S.R.I. has been organising interesting seminars at national and international levels benefiting scholars, students and the public as well. It has also been arranging lectures by eminent scholars regularly.

The Institute possesses a unique library of more than 40,000 rare books in many Indian and foreign languages and also ancient palm-leaf manuscripts.

The Kuppuswami Sastri Research Institute stands as a torch bearer for spreading the wisdom of our ancients in the field of literature, language, philosophy and science. It is ideally situated within the Sanskrit College, Mylapore, a central place in Chennai.

For more details contact :

The Secretary,
The Kuppuswami Sastri Research Institute
84, Thiru Vi Ka Road, Mylapore, Chennai 600 004.
Phone : 498 5320
e mail : ksri@satyam.net.in